பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2053 கார்த்திகை 21 புதன்கிழமை 07.12.2022 கதிர் 32



இனிது ரகசியம் அல்ல!

'நடக்கும் என்பார் நடக்காது. நடக்காதென்பார் நடந்துவிடும்.' கவிஞர் கண்ணதாசனின் வரிகள். சரியாக 60 ஆண்டுகளுக்கு முன்னர் வந்த 'தாயைக் காத்த தனயன்' படத்தின் பாடல். இன்னும் நினைவில் இருக்கும் வாசகங்கள். ☞2

# இலங்கைக்கு ஒருங்கிணைந்த உதவிகள் அவசியம் சர்வதேச நிதி நிறுவனங்கள் ஒன்றுகூடித் தீர்மானம்!

இலங்கை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு பல்தரப்பு நிதி நிறுவனங்களின் ஒருங்கிணைந்தஉதவித்திட்டம்இலங்கைக்குஅவசியமென சர்வதேச நிதி நிறுவனங்களின் தலைவர்கள் தீர்மானம் மேற்கொண்டுள்ளனர்.

உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச நாணய நிதியம் மற்றும் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி ஆகியவற்றின் பிரதிநிதிகளே மேற்படி தீர்மானத்திற்கு வந்துள்ளனர்.

கொழும்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்களுடன் நேற்று நடந்த நீண்ட, வட்டமேசை கலந்துரையாடலின் பின்னர் அவர்கள் இந்தத் தீர்மானத்திற்கு வந்துள்ளனர்.

நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சர் என்ற வகையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நீண்டகால ☞2



# 3 வருடங்களில் 32 அரச காணிகள் வடக்கில் படைகளுக்கு கையளிப்பு

## சத்தம் சந்தடியின்றி ஆளுநர்கள் நடவடிக்கை



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், டிசம்பர் 06

வடக்கு மாகாணத்தில் உள்ள 32 அரச காணிகள் மக்களுக்கோ அல்லது மக்களின் பிரதிநிதிகளுக்கோ தெரியாமல், சத்தம் சந்தடியின்றி, தற்போதைய ஆளுநராலும் அதற்கு முந்தியிருந்த ஆளுநராலும் படையினருக்குப் பாரதீனப்படுத்தப்பட்டு விட்டமை தற்போது கண்டறியப்பட்டுள்ளது. ☞2



## மோசு நிலைமை வரும் மைத்திரி எச்சரிக்கை!



விவசாயத்துறையில் எடுத்த தீர்மானங்களின் விளைவை முழு நாட்டு மக்களும் தற்போது நன்கு எதிர் கொண்டுள்ளார்கள். விவசாயத்துறையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைக்கு ☞2

## 4 ஆயிரம் கிலோ பீடி இலையுடன் எண்மர் புத்தளம் கடலில் கைது!



(ந.லோகதயாளன்)

இந்தியாவில் இருந்து இரு படகில் கடத்தி வரப்பட்ட 4 ஆயிரத்து 300 கிலோ பீடி இலையுடன் 8 பேர் ☞2



## செம்மணி வாயில் சிவனின் குடமுழுக்கு இன்று காலை

யாழ்ப்பாணம், செம்மணியில் 'யாழ்ப்பாணம் வரவேற்கின்றது' வளைவுக்குப் பக்கத்தில் சிவபூமி அறக்கட்டளை நிறுவியுள்ள செம்மணி வாயில் சிவன் கோயில் குடமுழுக்கு இன்று கார்த்திகை விளக்கீட்டுத் நாள் காலை 8மணிக்கு இடம்பெறும் என சிவபூமி அறக்கட்டளை நிறுவுநர் செஞ்சொற் சொல்வர் ஆறு.திருமுருகன் தெரிவித்தார்.

## முக்கிய தூதர்களுடன் ரணில் நேற்று சந்திப்பு



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நேற்றுக் காலை இலங்கையுள்ள மிக முக்கிய நாடுகளின் தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்களை சந்தித்துள்ளார். ☞12

## நாடாளுமன்றத்துக்கு ஒரு மாதம் விடுமுறை!

இவ்வாரம் வரவு - செலவுத்திட்டத்திற்கு பின்னர், வரும் செவ்வாயன்று மட்டும் கூடும் நாடாளுமன்றம் அதற்குப் பிறகு ஒரு மாதத்தின் பின்னரே ☞12

# வடக்கில் ஐயாயிரம் கடலட்டை பண்ணைகளா? ஐயோ! வேண்டவே வேண்டாம் என்கிறார் சுரேஷ்

யாழ்ப்பாணத்தில் ஐயாயிரம் கடலட்டை பண்ணைகளை அமைக்கும் கடற்றொழில் அமைச்சரின் முயற்சி பல்வேறு சிக்கல்களைத் தோற்றுவிக்கும் என்றும் அத்தகைய சிக்கல்கள் தோன்றாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டியது அமைச்சரின் பொறுப்பாகும் என்றும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் க.பிரேமச்சந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த விடயம் குறித்து அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

வடக்கு மாகாணத்தில் கடலட்டை பண்ணைகள் மிகப் பெருமளவில் உருவாக்கப்பட்டு வருகின்றன. கடல்தொழில் அமைச்சர், தற்பொழுது ஏறத்தாழ ☞12



காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரணில் அரசின் விடயங்களைக் குறிப்பதுபோலகவிஞர்கண்ணதாசனின் அடிகள் அமைந்துள்ளன.

நாடு எதிர் நோக்கும் அடுத்த தேர்தல் உள்ளூராட்சி சபைகளுக்கானது. இன்னும்நூறு நாள்களுக்குள் அது நடத்தப்பட வேண்டும்.

அதை நாசூக்காக ஒத்திவைக்கும் அரசின் திட்டத்துக்கு, ஒத்துழைக்கும் வழியைத் தேடியது தற்போதைய தேர்தல் ஆணையம். அதற்கு, வழி - காரணம் - சரியாகப் பொருந்தி வரவில்லை. அதனால் எப்படியும் தேர்தலை அறிவித்து அதை முன்னெடுக்க வேண்டிய கட்டாயம் ஆணையத்துக்கு. அதற்கு 'சட்டமா அதிபரிடம் கருத்துக் கேட்டு இருக்கிறோம்' என்று கூறி காலத்தை இழுத்தடித்து, சளாப்புவதற்கு தேர்தல் ஆணையம் எடுத்த முயற்சி பலிக்கவில்லை. 'நீங்கள் தேர்தலை அறிவித்து, அதை நடத்தலாம். அதற்கு தடை ஏதும் கிடையாது!' என்று தேர்தல் ஆணையத்துக்கு எழுத்தில் அறிவித்து, தேர்தலைத் தள்ளிப் போட்ட குற்றச்சாட்டு தன் மீது விழாமல் தந்திரோபாயமாக நடந்து கொண்டு விட்டது சட்டமா அதிபர் அலுவலகம்.

அதனால் உரிய காலத்தில் தேர்தல் நடத்தப்படும், ஜனவரி ஒன்பதாம் திகதிக்கு முன்னர் உரிய அறிவிப்பு வரும் என்று தேர்தல் ஆணையம் கூறும் நிலைமை. ஆனால் அறிவிப்பை உடனே விடுக்காமல் தேர்தல் ஆணையம் நாள்களைத் தள்ளி போடுவது சந்தேகத்தைத் தருகின்றது.

தேர்தல் ஆணையம் தேர்தல் நடத்துவோம் என்று சமாளிப்பு அறிவிப்பு விடுக்கின்றது. அமைச்சர் மஹிந்தஅமரவீர போன்றோர் தேர்தல் திட்டமிட்டபடி நடக்கும், ஒத்திவைக்கப்பட மாட்டாது என்று உறுதி கூறுகின்றனர். ஆனால் கள நிலைமை அப்படி இருப்பதாகத் தெரியவில்லை.

இவர்கள் நடக்கும் என்கிறார்கள்; ஆனால் விடயம் நடந்துவிடாது என்றுதான் தோன்றுகின்றது.

நாடு ஒரு தேசிய தேர்தலை எதிர்நோக்குகின்றது. அது நடக்குமா, நடக்காதா என்ற குழப்பம் நீடிக்கின்றது. வாயைத் திறக்காமல், அது குறித்த விடயத்தில் தொடர்ந்து மௌனம் பேணுகின்றார் நாட்டின் தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. அதனால் அவரது அரசு இந்தத் தேர்தலை நடத்த முற்படுமா - அல்லது திட்டமிட்டுத் தடுக்குமா என்ற சந்தேகம் - கேள்வி - பெரிதாகப் பிறக்கின்றது. தேர்தல் ஒன்றை - மக்களின் கருத்து வெளிப்பாட்டுக் கணிப்பு ஒன்றை - எதிர்கொண்டு, முகம்கொடுக்கும்திராணியற்ற அவர் உள்ளூராட்சித் தேர்தலை நடத்த முற்பட மாட்டார், கடைசி நேரத்தில் தேர்தலை தள்ளிப் போடப் பக்காத் திட்டம் வைத்திருக்கின்றார் என்றெல்லாம் தகவல் கசிகின்றது.

அரசமைப்புக்கு 21ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டு விட்டது. அதன் கீழ் அரசமைப்புக் கவுன்ஸில் நியமித்து, அந்தக் கவுன்ஸில் மூலம் தேர்தல் ஆணையம் உள்ளிட்ட சுயாதீன ஆணைக் குழுக்களை நியமனம் செய்ய வேண்டும். அரசமைப்பு கவுன்ஸில் அமைக்கப்பட்டு, புதிய சுயாதீன தேர்தல் ஆணையத்திற்கான அறிவித்தல் வெளிவந்தால், அது வெளிவந்த கையோடு, இருக்கும் தேர்தல் ஆணையம் செயலிழந்து விடும்.

இப்போது அதிகாரத்தில் இருக்கும் தேர்தல் ஆணையம் உள்ளாட்சித் தேர்தலை அறிவிக்க முற்பட்டால் உடனடியாக 21ஆவது திருத்தத்தின் கீழான அரசமைப்பு கவுன்ஸில் மூலம் புதிய தேர்தல் ஆணையத்தை நியமிப்பதற்கான நடவடிக்கையை அரசு விரைந்து எடுக்கும் எனத் தெரிகிறது.

அப்படி விரைந்து அரசமைப்புக் கவுன்ஸில் செயல்பட்டால், புதிய தேர்தல் ஆணையம் பதவியேற்று, அது உள்ளூராட்சித் தேர்தலை அறிவிக்கும் வரை தேர்தல் நடத்தப்பட மாட்டாது.

ஆக, உள்ளூராட்சி தேர்தலை உடனடியாக நடத்தாமல் தள்ளிப்போடும், சதித் திட்டத்தின் அங்கமே புதிய அரசமைப்பு கவுன்ஸிலை அவசர அவசரமாக நியமிக்க விரும்பி, ஜனாதிபதி ரணில் மேற்கொள்ளும் நடவடிக்கை என்று கொழும்பு வட்டாரங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

பிரதமராக மட்டும் இருந்து கொண்டு மாகாணசபைத் தேர்தல்களையே நிரந்தரமாகக் கிடப்பில் போடப்பண்ணிய ரணிலுக்கு, நிறைவேற்றதிகார ஜனாதிபதியாக இருந்து கொண்டு உள்ளூராட்சித் தேர்தலைத் தள்ளிப் போடப் பண்ணுவது வெறும் ஜுஜூபி வேலையாகத்தான் இருக்கும்..!

- மின்னல் -

## இலங்கைக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அபிவிருத்தியை நோக்காகக் கொண்ட பொருளாதார மீட்சி மற்றும் வளர்ச்சியுடன் இணைந்ததான இலங்கையின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தை முன்வைத்தார்.

உலக வங்கியின் துணைத் தலைவர் மார்ட்டின் ரைசர், ஆசிய அபிவிருத்தி வங்கியின் துணைத் தலைவர் ஷிக்சின் சென், சர்வதேச நாணய நிதியத்தின் சிரேஷ்ட அதிகாரி பீட்டர் ப்ரூயர், ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி கலாநிதி. உர்ஜித் பட்டேல், பிரதமர் தினேஷ் குணவர்தன, நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய, வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, ஜனாதிபதியின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க, ஜனாதிபதியின் ஆலோசகர் தினேஷ் வீரக்கொடி, மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி. நந்தலால் வீரசிங்க, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி உள்ளிட்டோர் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

## 3 வருடங்களில் 32 ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு மாகாணத்தில் படையினர் நிலைகொண்டுள்ள நிலங்கள் தனியார் காணிகளாகவும், அரச காணி மற்றும் திணைக்களங்களிற்குச் சொந்தமான காணிகளாகவும் காணப்படுகின்றன.

இவ்வாறு படைமுகாம் காணப்படும் நிலங்களைத் தமக்கே வழங்குமாறு படையினர் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இவற்றில் தனியார் நிலங்களின் நில உரிமையாளர்கள் அதற்குக் கடும் எதிர்ப்பைத் தெரிவிக்கும் அதேநேரம் தமது நிலம் தமக்கு வேண்டும் எனவும் கோரி நிற்கின்றனர்.

அரச காணிகள் அந்தந்தஐ பிரதேசப் பொதுப் பயன்பாட்டிற்கு ஒப்படைக்க வேண்டும் எனவும் நீண்ட காலமாக கோரிக்கை விடப்பட்டு வருகின்றது.

இருந்தபோதும். அரச காணிகள் இரகசியமான முறையில் - வெளியில் ஆரவாரமில்லாமல் - அரச அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் பாதுகாப்பு அமைச்சிற்கு கையளிப்புச் செய்யப்பட்டு, பிரதேச செயலாளர்களிடம் இருந்த உரிமை பாதுகாப்பு அமைச்சிற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

அவ்வாறு உரிமை மாற்றம் செய்யப்பட்ட விபரத்திற்கமைய 2020, 2021, 2022 ஆகிய 3 ஆண்டுகாலத்தில் மட்டும் 32 அரச காணிகள் பாதுகாப்பு அமைச்சிற்கு ஆளுநரால் கையளிக்கப்பட்டுள்ளன.

பாதுகாப்பு அமைச்சின் கீழ் உள்ள இராணுவம், கடற்படை, விமானப் படையினர் ஆகியோர் தற்போது நிலைகொண்டுள்ள இடங்கள் பலவே அவர்களிற்கென நிரந்தரமாக 'வெஸ்ரிங்' செய்யப்பட்டு கையளிக்கப்பட்டிருக்கின்றன.

இதற்கமைய வடக்கில் 32 படை முகாம்களிற்குமாக 22 கெக்டேயர் அல்லது 54 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டுள்ளது.

படையினரின் பயன் பாட்டிற்காகப் பாதுகாப்பு அமைச்சிற்கு கையளிக்கப்பட்ட இந்த 32 இடங்களில் ஒரேயொரு இடம் விமானப் படையிரின் பயன்பாட்டிற்காக கேப்பாபுலவில் வழங்கப்பட்டுள்ளது.

அதேபோன்று 3 இடங்கள் இராணுவத்தினருக்கும், எஞ்சிய 28 இடங்களும் கடற்படையினரின் பயன்பாட்டிற்காகவும் வழங்கப்பட்டுள்ளன.

3 ஆண்டுகளிலும் 2020 ஆம் ஆண்டு 16 முகாம்களிற்காக 9 கெக்டேயரும், 2021இல் 6 முகாமிற்கு 6.5 கெக்டேயரும் நிலம் வழங்கியுள்ளது. அதேநேரம் 2022 ஆம் ஆண்டில் 10 முகாம்களிற்காக 6 கெக்டேயர் நிலமும் வழங்கப்பட்டுள்ளமை கண்டுகொள்ளப்பட்டுள்ளது.

இதில் தற்போதைய ஆளுநர் ஜீவன் தியாகராயாவின் பதவிக் காலமான 2021 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 11 ஆம் திகதிக்குப் பின்பு இதுவரை 12 முகாம்களிற்கு நிலம் வழங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

மிகுதியானவை இதற்கு முன்னர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் ஆளுநராக இருந்த போது கையளிக்கப்பட்டிருந்தன.

## மோச நிலைமை வரும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விரைவான தீர்வை காணாவிட்டால் நாடு மிக மோசமான விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற 2023ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் விவசாயம், நீர்பாசனம் மற்றும் கடற்றொழில் ஆகிய அமைச்சுக்கள் மீதான நிதி ஒதுக்கீட்டின் குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு:-

விவசாய நடவடிக்கைகளுக்கான பயிர் விதை விநியோகத்தில் பாரிய தட்டுப்பாடு காணப்படுகிறது. காலநிலை மற்றும் மண்வளத்திற்கு உகந்த வகையிர் பயிர் விதைகள் சந்தையில் விநியோகிக்கப்படுவதில்லை.

தேசிய மட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்ட உணவு பொருகள் தற்போது முழுமையாக இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

நாட்டின் உணவு பாதுகாப்பு எந்நிலையில் காணப்படுகிறது என்பதை பற்றி புதிதாக குறிப்பிட வேண்டிய தேவை கிடையாது.

உணவு பாதுகாப்பிற்கு உரிய சட்டம் இதுவரை இயற்றப்படவில்லை. உணவு பாதுகாப்புக்கு விரைவான தீர்வு எடுக்கா விட்டால் அது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும்.

விலங்குகளினால் பயிர்செய்கைக்கு ஏற்படும் விளைகள் தொடர்பில் தொழிநுட்ப ரீதியில் ஒரு தீர்மானத்தை எடுக்க வேண்டும்.

நா நாட்டில் உரம் தட்டுப்பாடு இல்லை என அரசாங்கம் குறிப்பிடுகிறது. ஆனால் அது நடைமுறைக்கு சாத்தியமற்றதாக உள்ளது. சந்தையில் உரம் ஒவ்வொரு விலையில் காணப்படுகிறது.

நெல்லுக்கான உத்தரவாத விலை இல்லாத காரணத்தினால் விவசாயிகள் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

நெற்பயிர்செய்கை உற்பத்திக்கான செலவுக்கும், நெல் சந்தைப்படுத்தல் சபை நிர்ணயிக்கும் விலைக்கும் இடையில் பாரிய வேறுப்பாடு காணப்படுகிறது. ஆகவே விவசாயிகள் திருப்தியடையும் வகையில் நெல்லுக்கான உத்தரவாத விலை நிர்ணயிக்க வேண்டும்.

விவசாயத்துறையில் எடுத்த தீர்மானங்களின் விளைவை முழு நாட்டு மக்களும் தற்போது நன்கு எதிர்கொண்டுள்ளார்கள்.

விவசாயத்துறையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைக்கு விரைவான தீர்வை காணாவிட்டால் நாடு மிக மோசமான எதிர்விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும்.

தேசிய மட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் உரங்களின் தரம் குறித்து பாரிய பிரச்சினை தோற்றம் பெற்றுள்ளது. சேதன பசளை உற்பத்திகள் தொடர்பில் விவசாயத்துறை அமைச்சு உரிய கவனம் செலுத்த வேண்டும்.- என்றார்.

## 4 ஆயிரம் கிலோ பீடி ......



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தியாவின் தமிழ்நாட்டில் இருந்து கொண்டு வரப்பட்ட இந்த பீடி இலைகள் இலங்கையின் புத்தளம் கடற்பரப்பில் வைத்து சிக்கியுள்ளன.

கைது செய்யப்பட்ட 8 கடத்தல்காரருடன் படகுகள், பீடி இலை என்பன கற்பிட்டி கடற்படை தளத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

விளம்பரத் தொடர்புகளுக்கு –
தொலைபேசி இலக்கம்
076 443 8622
kalaikkathiradvt@ gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

# மருத்துவ மாணவர் ஆராய்ச்சி மாநாடு!

## யாழ். பல்கலையில்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் ஐந்தாவது மருத்துவ மாணவர் ஆராய்ச்சி மாநாடு நேற்று முன்தினம் திங்கட்கிழமை மருத்துவ பீட கூவர் அரங்கில் இடம்பெற்றது.

"ஆராய்ச்சியினூடான ஞானம் – Wisdom through Research" என்ற தொனிப் பொருளில் இடம்பெற்ற இந்த மருத்துவ மாணவர் ஆராய்ச்சி மாநாட்டில் பேர்மிங்ஹாம் பல்கலைக்கழகத்தின் பிரயோக சுகாதார ஆராய்ச்சி நிறுவனத்தை (Institute of Applied Health Research, University of Birmingham) சேர்ந்த சுகாதார தரவு அறிவியல் மற்றும் பொது சுகாதாரப் (Professor in Health Data Science and Public Health) பேராசிரியர் கிருஸ்ணராஜா நிரந்தரகுமார் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு முதன்மை உரையாற்றினார்.

நிகழ்வில், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் இ.சுரேந்திரகுமாரன், மருத்துவ பீடத்தைச்சேர்ந்த பேராசிரியர்கள், யாழ்ப் பாணம் போதனா வைத்தியசாலையைச் சேர்ந்த வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், மருத்துவ பீட விரிவுரையாளர்கள் மற்றும் மருத்துவ பீடத்தின் 40ஆம், 41ஆம் மற்றும் 42 ஆம் அணிகளைச் சேர்ந்த மாணவர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.



40 ஆம் அணி மருத்துவ மாணவர்களால் சுமார் 30 ஆராய்ச்சி சுருக்கங்கள் இந்த ஆய்வு மாநாட்டில் முன் வைக்கப்பட்டன. "நாள்பட்ட நோய்களும், பராமரிப்பும்", "பெண்கள் – குழந்தைகளுக்கான ஊட்டச் சத்தும், அறிவூட்டலும்", "பெருந் தொற்றுப் பரவல் அபாயம்" ஆகிய மூன்று தலைப்புகளில் ஆராய்ச்சி அமர்வுகள் இடம் பெற்றன.





யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடம் மற்றும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையைச் சேர்ந்த நிபுணர்கள் அடங்கிய மதிப்பீட்டுக் குழுவினால் வழங்கப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட ஆராய்ச்சி சுருக்கங்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

# தடையின்றி மின்சாரத்தை வழங்க ஓர் அலகுக்கு 59 ரூபா வேண்டும்!

## அமைச்சர் காஞ்சன விஜேசேகர இப்படிக் கருத்து



அடுத்த வருடம் நாட்டில் தடை இல்லாமல் மின்சாரம் வழங்கப்பட வேண்டுமானால், ஓர் அலகு மின்சாரத்திற்கு 56.90 ரூபா செலவிட வேண்டும் என இலங்கை மின்சார சபை மதிப்பிட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, ஓர் அலகுக்கு 56.90 ரூபா என்ற நிலையான கட்டணம் அறவிடப்பட வேண்டும். அத்துடன், குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு நேரடி பண உதவித்தொகை வழங்கப்பட வேண்டும் என்பது தமது யோசனை என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இலங்கை மின்சார சபையின் தரவுகளின்படி நாட்டில் 67 லட்சத்து 9 ஆயிரத்து 574 மின்சார வாடிக்கையாளர்கள் இருக்கின்றனர் எனவும், ஓர் அலகிற்கு தற்போதைய சராசரி கட்டணம் 29.14 ரூபா அறவிடப்படுகிறது.

இதனால் 423.5 பில்லியன் ரூபா பற்றாக்குறை ஏற்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார். 0-30 அலகு தொகுதியில் 14 லட்சத்து 60 ஆயிரத்து 828 நுகர்வோர் உள்ளனர். அவர்கள் ஓர் அலகுக்காக 8 ரூபாவை செலுத்துகின்றனர்.

30-60 அலகு தொகுதியில் 16 லட்சத்து 83 ஆயிரத்து 172 நுகர்வோர் உள்ளனர். அவர்கள் ஓர் அலகுக்காக 10 ரூபா செலுத்த வேண்டும். 60-90 அலகு தொகுதியில் 17 லட்சத்து 2 ஆயிரத்து 515 நுகர்வோர் உள்ளனர். ஓர் அலகுக்காக 16 ரூபாவை அவர்கள் செலுத்த வேண்டும்.

90-180 அலகு தொகுதியில் 15 லட்சத்து 59 ஆயிரத்து 131 நுகர்வோர் உள்ளனர் ஓர் அலகுக்காக 50 ரூபாவை செலுத்த வேண்டும். 180 மேற்பட்ட அலகு தொகுதியில் உள்ள 3 லட்சத்து 3 ஆயிரத்து 928 நுகர்வோர் ஓர் அலகுக்காக 75 ரூபாவை செலுத்துகின்றனர்.எனவே இதில் சமநிலை இல்லாத நிலைமை இருக்கிறது.

இந்த நிலையில் அடுத்த வருடம் முதல் மின்சாரத்தின் ஓர் அலகுக்கான கட்டணத்தை 56 ரூபா 90 சதமாக அதிகரித்து, குறைந்த வருமானம் பெறுகின்றவர்களுக்கு நிவாரணம் வழங்க பரிந்துரைப்பதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது, கீழ் அடுக்கு (90 அலகுக்கு கீழ்) மின்சார நுகர்வோருக்கு அதிக அளவில் மானியம் வழங்கப்படும். இதில் ஒரு பகுதியை, அதிகளவில் மின்சாரத்தை நுகர்பவர்கள் செலுத்தும் மேலதிக தொகையை கொண்டும், மீதமானவை திறைசேரியினாலும் ஈடுசெய்யப்படும் என அமைச்சர் தெரிவித்தார்.

# வடக்கு ஆளுநர் செயலகம் முன் கவனவீர்ப்பு போராட்டம் நடத்த ஆசிரியர் சங்கம் ஏற்பாடு!




வடமாகாண ஆளுநர் செயலகம் முன்பாக பல்வேறுபட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுக்க இலங்கை ஆசிரியர் சங்கம் தீர்மானித்துள்ளது.

டிசெம்பர் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பாடசாலை நிறைவடைந்த பின்னர் பிற்பகல் 2 மணியளவில் மேற்படி போராட்டம் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இலங்கை ஆசிரியர் சங்க உபதலைவர் தீபன் திலீசன் இதனைத் தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் –

வடமாகாண கல்வியமைச்சில் காணப்படும் சீர்கேடுகள் மற்றும் முறைகேடுகள் தொடர்பாகவும் நிர்வாக ஆளுமையற்ற தன்மை காரணமாகவும் மேற்படி போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளோம்.

வடமாகாண கல்வித்துறையில் உள்ள சீர்கேடுகள் தொடர்பில் 2021 டிசெம்பர் மாதம் வடமாகாண ஆளுநர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க 100 பக்க முறைப்பாடு ஒன்றை வழங்கியிருந்தோம். அதற்கு ஒரு விசாரணைக் குழுவை அவர் நியமித்தனர்.

மேற்படி விசாரணை தொடர்பான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரைக் கேட்டபோதும் அது இதுவரை எமக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

முறைப்பாட்டை வழங்கி அண்ணளவாக ஒரு வருடமாகிய போதும் கூட விசாரணை இன்னும் முடிவுறாத நிலைமையில் எமக்கு இதனுடைய பின்னணி தொடர்பில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

மூன்றாம்தவணை ஆரம்பித்தபோதும் இரண்டாம்தவணைப் பரீட்சையை வைக்க முடியாத அளவுக்கு வடமாகாண கல்வியமைச்சு மற்றும் வடமாகாண கல்வித் திணைக்களத்தின் நிலைமை போயுள்ளது. இந்த நிலையில் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து மேற்படி போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம் – என்றார்.

# இலங்கை மின்சார சபையை எட்டாக உடைக்க அரசுக்கு ஆணை உள்ளதா?

## லக்ஷ்மன் கிரியெல்ல சபையில் கேள்வி

அரச வளங்களைப் பாதுகாப்பதாகக் கூறி வந்த அரசாங்கம் எவ்வாறு மின்சார சபையை எட்டாக உடைக்கும் என எதிர்க் கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல கேள்வியெழுப்பினார்.

நாடாளுமன்றில் உரையாற்றிய அவர், இவ்வாறான விடயங்களை செய்வதற்கு இந்த அரசாங்கத்துக்கு ஆணை உள்ளதா என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

எவ்வாறாயினும் இது தொடர்பாக அமைச்சரவையில் பேசப்படவில்லை என்றும் செய்திகளை கொண்டு முடிவுக்கு வர வேண்டாம் என்றும் சபை முதல்வர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

இதற்கு பதிலளித்த லக்ஷ்மன் கிரியெல்ல 'செய்தித்தாள்களில் வந்ததைப் பற்றி நான் பேசவில்லை. அந்த குழுவில் நானும் இருக்கிறேன். இதுபற்றி அமைச்சர் காஞ்சன அங்கு கூறினார்' என்றார்.



# கைப்பற்றப்படுகின்ற ஹெரோயின் போதைகள் அதிகாரிகளிடம் இருந்து மீண்டும் மக்களுக்கு!

## நீதி அமைச்சர் விஜயதாஸ சாடல்

சட்டத்தை அமுல்படுத்தும் பிரிவினரால் கைப்பற்றப்படும் ஹெரோயின் பின்னர் மீண்டும் சந்தைக்கு வரும் நிலை காணப்படுவதாக நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நீதி, சிறை விவகாரங்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் செலவீனங்கள் மீதான வரவு – செலவுத் திட்ட குழு நிலை விவாதத்தின் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

ஹெரோயினை கைப்பற்றும் பொலிஸ் அதிகாரிகளே அதனை மக்களிடமே திருப்பி அனுப்புவதை அண்மைக்காலமாகக் காணக்கூடியதாக இருப்பதாக சுட்டிக் காட்டினார்.

அவ்வாறான தவறுகளை செய்யும் அதிகாரிகளுக்கு எதிராக சட்டம் அமுல்படுத்தப்படும் என்றும் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## வெளிநாட்டு மோகம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசு ஒரு விசித்திரமான – விநோதமான – போக்கில் நகர்வதாகத் தோற்றுகின்றது.

அதன் கொள்கைப் போக்கு சில சமயங்களில் விபரீதமானதாகவும், வித்தியாசமானதாவும், முன்னுக்குப் பின் முரணானதாகவும் காணப்படுகின்றது.

நாட்டின் மோசமான பொருளாதார நிலைமையை அடுத்து, கற்றறிந்த தரப்பினர் இந்த நாட்டில் மினக்கெடுவது பயனில்லை, வேறு வழியைப் பார்க்கலாம் என்று நாட்டை விட்டு நடையை கட்டத் தொடங்கி விட்டனர்.

குறிப்பாக மருத்துவம், தகவல் தொழில்நுட்பம், பொறியியல், கணக்கியல் துறை போன்றவற்றைச் சார்ந்த புத்திஜீவிகள், நிபுணர்கள், துறை சார்ந்த வல்லுநர்கள் தினசரி நாட்டை விட்டு வெளியேறி வருகின்றனர்.

சிறப்பு பயிற்சி, விசேட நிபுணத்துவம், உயர் கல்வி, அதிக அனுபவம் கொண்ட மூளைசாலிகளை நாடு இழந்து வருகின்றது.

இது உண்மை. நாட்டின் வலிமையும் மேன்மையும் இதனால் தேய்வடைந்து செல்வது கண் கூடு. பலவீனமான ஒரு நிலையை நோக்கி நாடு நகர்ந்து கொண்டிருக்கின்றது.

"நாட்டை நிமிர்த்தித் தருவேன். நாட்டை விட்டு வெளியேறாதீர்கள்!" – என்று நாட்டு மக்களிடம் இறைஞ்சுகுகின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

கற்றறிந்த சமூகம் அவரது அழைப்புக்கு மதிப்பு கொடுத்து, அதைப் பின்பற்றுவதாயின், அந்த அழைப்பு வெறும் வார்த்தை ஜாலத்தில் கொடுக்கப்பட்டதாக இருக்கக் கூடாது, அதையும் தாண்டி, சொல்லிலும் செயலிலும் நம்பிக்கை தருவதாக அது அமைய வேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவிக்கு வந்த பின்னர், விவகாரங்கள் பெரும்பாலும் வாய்ப்பேச்சில் தான் இருக்கின்றன. அவை செயலில் இன்னும் நம்பிக்கை தருவனவாக அமையவில்லை.

ரணிலின் அரசு அதிகாரத்துக்கு வந்ததும் முதல் செய்த வேலை என்ன?

உள்ளூர் தொழிலாளர் வர்க்கத்தை வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்க வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் மூலம் முழு அளவில் முயற்சி எடுக்கப்பட்டது. அதன் மூலம் அந்நிய செலாவணியை ஈட்டலாம் என்ற நப்பாசையில் அந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

அரச ஊழியர்களையும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளைப் பெறுவதற்கு அனுப்பும் எத்தனமாக அவர்களுக்கு ஐந்து வருட சம்பளமற்ற விடுமுறை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. அத்திட்டம் ஊக்குவிக்கப்பட்டது.

இதன் மூலம் இரண்டு சகாயங்களைப் பெற அரசு திட்டமிட்டது. ஒன்று – அரச ஊழியர்களுக்கு ஐந்து வருடம் சம்பளம் கொடுக்கும் நெருக்கடி குறையும். இரண்டாவது – அவர்கள் வெளிநாட்டில் உழைக்கும் பணம் எப்படியும் நாட்டுக்குள் வந்தாக வேண்டும். அதன் மூலம் அந்நிய செலாவணியும் கிட்டும் என்ற நப்பாசையும் இருந்தது.

இப்படி எல்லாம் அரசு ஊழியர்களையும் சேர்த்து வெளிநாட்டுக்கு அனுப்பத் தூண்டிய அரசு இது. இப்போது வெளிநாட்டுக்கு அவசரப்பட்டு போகாதீர்கள் என்று அதுவே கெஞ்சும் நிலைமை...!

## செயற்கை குருதிச் சுற்றோட்ட தொகுதி கருவி கண்டுபிடிக்கப்பட்டதாக யாழ்.இளைஞன் தெரிவிப்பு!



செயற்கையான குருதிச் சுற்றோட்ட தொகுதி கருவியொன்றை தான் புதிதாகக் கண்டுபிடித்துள்ளேன் என யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞரான கோகுலன் தெரிவித்தார்.

இதயம் செயலிழந்தாலோ மாரடைப்பு ஏற்பட்டாலோ உடனடியாக மூன்று நிமிடங்களுக்குள் குறித்த செயற்கை குருதிச்சுற்றோட்டத் தொகுதி கருவியை உடலில் இணைத்தால் உயிரிழப்பில் இருந்து தவிர்க்க முடியும் என்றார்.

யாழ் ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகசந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில் –

இது முக்கியமான மருத்துவ கண்டுபிடிப்பாக இருக்கும். நுரையீரல் செயலிழந்தவர்களும் இதனைப் பயன்படுத்தக்கூடியதாக இருக்கும்.

இதயமும் நுரையீரலும் செயலிழந்தவர்கள் இந்த கருவியைப் பயன்படுத்தக் கூடிய வகையில் இதயமும் நுரையீரலும் இணைந்த செயற்கையான குருதிச் சுற்றோட்ட தொகுதியாக இந்தக் கருவி வடிவமைக் கப்பட்டுள்ளது. இந்த கருவிக்கு 2009 இதயம் என பெயரிடப்பட்டுள்ளது. – என்றார்.

## உள்ளூராட்சித் தேர்தல் திட்டமிட்டபடி நடக்கும்

### அமைச்சர் அமரவீர அறிவிப்பு



உள்ளூராட்சிசபைத் தேர்தலை ஒத்திவைக்கும் எண்ணம் அரசாங்கத்திடம் இல்லை என அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

எனவே, உரிய நேரத்துக்குள் தேர்தல் நடத்தப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதார நெருக்கடிகள் இருந்தாலும், உள்ளூராட்சித் தேர்தலை பிற்போடும் திட்டம் எதுவும் இல்லை. திட்டமிட்டவாறு தேர்தல் நடத்தப்படும் என அவர் கூறியுள்ளார்.

தங்களுக்குதான் மக்கள் ஆதரவு உள்ளது என மார்தட்டிக்கொள்ளும் எதிரணிகளுக்கும் மக்கள் யார் பக்கம் என்பதை தெளிவாக பார்க்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, தேர்தலுக்கு தயாராகுமாறு கட்சி தலைவர்களுக்கு சவால் விடுப்பதாகவும் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

நாட்டு மக்கள் தேர்தலைக் கோரவில்லை. அரசியல் கட்சிகள்தான் துடிக்கின்றன.

நாடு பற்றி எரியும்போது, அதனை அணைப்பதற்கு ஒத்துழைக்காத தரப்புகளுக்கு தேர்தல் ஊடாக மக்கள் பாடம் புகட்டுவார்கள். – எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## தண்ணீர் வாளிக்குள் தவறி வீழ்ந்து ஒன்றரை வயதுக் குழந்தை மரணம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், டிச.07

ஊர்காவற்றுறை கத்தோலிக்க ஆலயம் ஒன்றில் வாளி நீரில் தவறி வீழ்ந்த ஒன்றரை வயதுப் பெண் குழந்தை பரிதாபகரமாக உயிரிழந்தது.

சசிபன் கெத்சியால் என்னும் நாரந்தனை வடக்கு ஊர்காவற்றுறையைச் சேர்ந்த குழந்தையே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது.

நாரந்தனையில் உள்ள ஒரு கத்தோலிக்க தேவாலயத்திற்கு கடந்த 4ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஆராதனைக்கு குடும்ப சகிதம் சென்ற குழந்தைதாய், தந்தையர் ஆராதனையில் கலந்துகொண்டிருந்த சமயம் வெளியே சென்றே விளையாடியுள்ளது. இதன்போது வாளியில் இருந்த நீரில் விளையாடிய சமயம் நீர் நிறைந்த வாளிக்குள் தலைகீழாக தவறி வீழ்ந்துள்ளது.

குழந்தையைக் காணாத பெற்றோர் அயலில் தேடி குழந்தை நீர் நிறைந்த வாளியில் வீழ்ந்து கிடப்பதை அவதானித்து உடனடியாக மீட்டு வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். அங்கிருந்து குழந்தை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டது. சிகிச்சை பலனின்றி நேற்று அதிகாலை குழந்தை உயிரிழந்தது.

மரண விசாரணையை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

## இலங்கைக்குக் கடத்தப்படவிருந்த 2 ஆயிரம் கிலோ மஞ்சள் சிக்கியது

### வேதாளையில் தமிழகப் பொலிஸார் பறிமுதல்

(ந.லோகதயாளன்)



இந்தியாவின் ராமநாதபுரம் மாவட்டம் வேதாளை பகுதியில் இருந்து இலங்கைக்குக் கடத்தப்படவிருந்ததாகக் கூறப்படும் 2 ஆயிரம் கிலோ மஞ்சள் தமிழகப் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

வேதாளைப் பகுதியூடாக இலங்கைக்கு உரம், மஞ்சள், கடலட்டை போன்றவை இலங்கைக்கு கடத்திச் செல்லப்படுவதாகக் கிடைத்த முறைப்பாட்டினையடுத்து சுங்கத்துறை அதிகாரிகள் சகிதம் மண்டபம் வேதாளை பகுதியில் பொலிஸார் நேற்று ரோந்துப் பணியில் ஈடுபட்டனர்.

இதன்போது அந்த வழியே சென்ற மகேந்திரா வான் ஒன்றை வழிமறித்தபோது அந்த வான் நிற்காமல் வேதாளையை நோக்கி சென்றது. அதனைத் துரத்தி சென்ற சுங்கத்துறை அதிகாரிகள் வானை நிறுத்தியபோது வாகனத்தில் இருந்த ஓட்டுநர் மற்றும் உதவியாளர் தப்பி ஓடினர்.

இதனைத் தொடர்ந்து சுங்கத்துறை அதிகாரிகள் அந்த வாகனத்தில் இருந்த இரண்டாயிரம் கிலோ சமையல் மஞ்சளைக் கைப்பற்றி வாகனத்தை உழவு இயந்திரம் மூலம் கட்டி இழுத்து ராமநாதபுரம் சுங்கத்துறை அலுவலகத்திற்குக் கொண்டு சென்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# தென்மராட்சி கல்விவலயத்தில் 10 பாடசாலைகளில் திறன் வகுப்பறைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன!








தென்மராட்சி நிறுவனங்களின் சர்வதேச ஒன்றியம்(IFTF-Canada) அனைத்துலக மருத்துவ நல அமைப்பு (IMHO-USA), இரட்ணம்பவுண்டேசன்(Ratnam Foundation-UK) எனும் அமைப்புக்களால் தென்மராட்சி கல்வி வலயத்தில் திறன் பலகைகளினூடான கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

வலயக் கல்விப்பணிப்பாளரின் கோரிக்கைக்கமைவாக இந்த அமைப்புக்களால் 10 பாடசாலைகளுக்கான திறன்பலகைகள், குறும்தூர ஊடக எறியற் கருவிகள், மடிக்கணினிகள், ஆசிரியர்களுக்கான விரலிகள் வழங்கப்பட்டமை மட்டுமன்றி 40 இற்கும் மேற்பட்ட மேற்குறித்த பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் கல்விப்புலம் சார்ந்த வலய உத்தியோகத்தர்கள் அனைவருக்குமான பயிற்சிகளும் வழங்கப்பட்டுள்ளன.

ஆசிரியர்களுக்கான பயிற்சிகள் ஆரம்ப கல்வி மற்றும் இடைநிலைக்கல்வி அணியினரென இரு குழுக்களாக்கப்பட்டு ஈதக்சலாவ வளவார் குழாத்தால் மூன்று நாள்கள் கொண்ட பயிற்சியாகத் திட்டமிடப்பட்டு இரு நாள் பயிற்சிகள் நிறைவடைந்துள்ள நிலையில் பாடசாலைகளில் திறன்பலகை மூலம் கற்பிக்கும் செயற்பாடுகள் ஆரம்பமாகியுள்ளன. மூன்றாம் நாள் பயிற்சியில் இணையவழி பயன்பாடு மற்றும் மாணவரின் சிந்தனைக் கிளரலினூடான சிறந்த செயலூக்க கற்பித்தல் முறைகள் விளக்கப்படவுள்ளன.

இவற்றை வலுப்படுத்து முகமாக கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலை மற்றும் எழுதுமட்டுவாழ் கணேசா வித்தியாசாலையில் கல்வி பண்பாடு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.வரதீஸ்வரன், வலயக்கல்வி பணிப்பாளர் த.கிருபாகரன், பிரதிக் கல்வி பணிப்பாளர் மு. ஜெகதாஸ், உதவிக்கல்வி பணிப்பாளர்கள், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் IMHO-USA அமைப்பின் வதிவிட பணிப்பாளராகிய சு.கிருஷ்ணகுமார் ஆகியோரின் பிரசன்னத்தில் திறன் வகுப்பறைகள் உத்தியோகபூர்வமாக சென்ற வாரத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டன. பாடசாலைதோறும் திறன் பலகை செயற்பாடுகளை மதிப்பிட்டு அறிக்கை சமர்ப்பிக்கும் பணி வலயத்தின் தகவல் தொழில்நுட்ப ஆசிரிய ஆலோசகர் திருமதி உ. சிவநங்கையிடம் வலயக்கல்வி பணிப்பாளரால் வழங் கப்பட்டுள்ளது. பாடசாலைகளுக்கும் தமது அன்றாட செயற்பாடுகளை வெளிப்படுத்த வட்ஸ்அப் குழுமமொன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை சிறப்பானதோர் விடயமாகும்.

# அகில இலங்கை சைவப்புலவர் சங்க வைரவிழாவை முன்னிட்டு சைவசமய அறிவுப் போட்டிகள் ஏற்பாடுகள்

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின் வைரவிழாவை முன்னிட்டு நடத்தப்படும் சைவசமய அறிவுப்போட்டிகள் எதிர்வரும் 24,25 சனி மற்றும் ஞாயிறு தினங்களில் நடைபெறவுள்ளது

என அகில இலங்கை சைவப்புலவர் சங்கச் செயலாளர் சைவப்புலவர் செ.த.குமரன் அறிவித்துள்ளார்.

தனிநிலைப்போட்டிகள் 24 ஆம் திகதி சனிக்கிழமையும் குழுநிலைப்போட்டிகள் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் நடைபெற உள்ளன.

வடக்குமாகாண மட்டப்போட்டிகள் யாழ்.வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்திலும் கிழக்கு மாகாண மட்டப் போட்டிகள் மட்டக்களப்பு ஆனைப்பந்தி பெண்கள் மகாவித்தியாலயத்திலும் மத்திய மாகாண மட்டப் போட்டிகள் கண்டி கலைமகள் தமிழ்வித்தியாலயத்திலும் மேல்மாகாண மட்டப்போட்டிகள் கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரியிலும் இடம் பெறவுள்ளன.

போட்டிக்கு விண்ணப்பித்த போட்டியாளர்கள் அன்றைய தினம் பொறுப்பாசிரியருடன் போட்டிக்கு சமுகமளித்தல் வேண்டும்.



காலைக்கதிர் Kalaikkathir

# கைதுசெய்யப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டோருக்காக தமிழ் அரசியல் தலைவர்கள் குரல்கொடுக்க வேண்டும்!

## காணாமலாக்கப்பட்டோர் பாதுகாலர் சங்கம் கோரிக்கை




25 வருடங்களாகக் கைதுசெய்யப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டோருக்காக தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் அரசாங்கத்திடமும் சர்வதேசத்திடமும் பேச வேண்டுமென கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டு காணாமலாக்கப்பட்டோர் பாதுகாலர் சங்கம் என்ற அமைப்பின் பிரதிநிதி, அண்மையில் யாழ். ஊடக அமையத்தில் இடம் பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே இதனைத் தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் –

1996 ஆம் ஆண்டு சர்வோதய இயக்கத்தில் எனது சகோதரன் பணியாற்றியபோது இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு காணாமலாக்கப்பட்டார். அவரைப் போல 600 பேர் வரை கைது செய்யப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டனர். இதற்காகக் கைது செய்யப்பட்டு காணாமலாக்கப்பட்டார் பாதுகாவலர் சங்கம் என்ற அமைப்பை உருவாக்கி செயற்பட்டோம்.

1997 ஆம் ஆண்டில் அப்போது இருந்த ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவை அலரிமாளிகையில் சந்தித்து கலந்துரையாடினோம். ஆறு மாதங்களுக்குள் தீர்வு தருவதாக அவர் கூறியிருந்தார். ஆனால் எதுவுமே நடக்கவில்லை. 1999 ஆம் ஆண்டு பலாலி படைத் தளத்தில் இடம்பெற்ற செய்மதிக் கலந்துரையாடலில் ஜனாதிபதியுடன் பேசியும் பலன் கிடைக்கவில்லை. சாத்வீகமாகப் பல்வேறு வழிகளிலும் நாம் அப்பாவி இளைஞர்கள் மற்றும் சகோதரர்களின் விடுதலைக்காகப் போராடினோம்.

கடந்த இருபது வருடங்களாக காணாமலாக்கப்பட்ட உறவுகளைத் தேடி கல்வி, பொருளாதாரம் என பலவற்றிலும் நலிவுற்றுப் போனோம். எத்தனையோ ஆணைக் குழுக்களுக்கு முன்னால் எமது சாட்சியங்களை வழங்கி இருந்தோம்.

நாம் அரசுக்கு எதிராக எவ்வித வன்முறையிலும் ஈடுபடவில்லை. சாத்வீகமாகவே எமது பிள்ளைகள் சகோதரர்களுக்கு என்ன நடந்தது என்பதைக் கோருகிறோம்.

எங்களுக்கு 20 வருடங்களுக்கு மேலாக ஏற்பட்ட ஏமாற்றம், சலிப்பு போன்றவற்றால் தற்போது எவ்வித போராட்டங்களிலும் நாம் பங்கேற்பது கிடையாது. எமது நிலைமை தொடர்பாகவோ எமது பிரச்சினைகள் தொடர்பாகவோ தமிழ்க் கட்சிகள் எவையுமே பேசுவதும் கிடையாது. யுத்தத்துக்கு பின்னர் அல்ல. 1996 ஆம் ஆண்டுக்கு பின்னர் 25 வருடங்களாக நாம் காணாமல் ஆக்கப்பட்டோருக்காகப் போராடி வருகின்றோம். இதனைக் கருத்திற்கொண்டு தமிழ் அரசியல் தலைவர்கள் கைது செய்யப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காக குரல் கொடுக்க வேண்டும். – என்றார்.

# பண்டாவின் கொள்கைகளை ஏற்று நான் எனது பணிகளை ஆற்றுகிறேன்!


சந்திரிகா பெருமிதம்

நான் ஐக்கியதேசிய கட்சியில் அல்லது ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து கொள்ள மாட்டேன் என மீண்டும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார் .முகநூல் பதிவொன்றில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

நான் ஸ்ரீலங்கா சுதந்திரகட்சியிலேயே பிறந்தேன். அந்த கட்சியிலேயே வளர்ந்தேன். இறுதி வரை அந்த கட்சியிலேயே இருப்பேன். இன்று பலதவறான கொள்கைகளைப் பின்பற்றியமையால் இன்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பலவீனமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

ஆகவே நான் பண்டாரநாயக்கவின் கொள்ளைகளைப் பாராட்டுகின்றேன். அந்த கொள்கையை ஏற்று தெளிவான கொள்கை அடிப்படையில் நான் பணியாற்றுகின்றேன்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தற்போதைய தலைவர்கள் தங்கள் குறுகிய நோக்கங்களுக்காக கட்சியின் கொள்கைகளுக்கு துரோகமிழைக்கின்றனர் – எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# தொழிலாளர்களின் குழப்பங்களை அடுத்து சீனாவை விட்டு நகர விரும்புகிறது ‘அப்பிள்’

## இந்தியா, வியட்நாமின் பக்கம் கண் வைக்கிறது

வன்முறை எதிர்ப்புகளை அடுத்து சீனாவில் இருந்து தனது உற்பத்தி மையத்தை மாற்ற அப்பிள் திட்டமிட்டுள்ளது.

சீனாவின் Zhengzhou 'iPhone City' ஆலையில் சமீபத்திய குழப்பம் அப்பிளை அதன் உற்பத்தி மையத்தை மாற்றத் தூண்டுகிறது. அப்பிளின் நெருக்கடியான விநியோகத்தை சீனா மேலும் நெருக்குவாரத்துக்குள் தள்ளுகிறது அத்தோடு சீனாவின் கடுமையான பூச்சிய கொவிட் கொள்கை உலகளாவிய தொழில் நுட்ப நிறுவனங்களை எவ்வாறு பாதிக்கிறது என்பதை யும் இது எடுத்துக்காட்டுகிறது

அப்பிள், சமீபத்திய வாரங்களில், அதன் உற்பத்தியில் சிலவற்றை சீனாவுக்கு வெளியே மாற்றுவதற்கான திட்டங்களை விரைவுபடுத்துகிறது என்று தெரிகின்றது. ஆசியாவின் பிற இடங்களில், குறிப்பாக இந்தியா மற்றும் வியட்நாமில் தயாரிப்பை அசெம்பிள் செய்வதற்கு கூடுதல் திட்டமிடுமாறு தனத் விநியோகஸ்தர்களிடம் அது கூறுகிறது.

தி வோல் ஸ்ட்ரீட் ஜேர்னலின் கூற்றுப்படி, இது தொடர்பான ஆலோசனைகளில் ஈடுபட்டவர்கள், பாக்ஸ்கான் டெக்னாலஜி குழுமத்தின் தலைமையிலான தைவானிய அசெம்பிளர்களை நம்பியிருப்பதை அப்பிள் குறைக்க விரும்புவதாகக் கூறினார்.

சீனாவின் Zhengzhou 'iPhone City' ஆலையில் சமீபத்திய குழப்பம் அப்பிள் அதன் உற்பத்தி மையத்தை மாற்றத் தூண்டுகிறது. சீனாவில், Zhengzhou ஐபோன்கள் மற்றும் பிற அப்பிள் தயாரிப்புகளை தயாரிப்பதற்காக Foxconn நடத்தும் தொழிற்சாலையில் 300,000 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். சந்தை ஆராய்ச்சி நிறுவனமான கவுண்டர்பாயிண்ட் ரிசர்ச் படி, ஒரு கட்டத்தில், இது மட்டுமே ஐபோன்களின் ப்ரோ வரிசையில் 85 சதவீதமாக இருந்தது.

நவம்பர் பிற்பகுதியில், மத்திய சீனாவில் உள்ள உலகின் மிகப்பெரிய ஐபோன் தொழிற்சாலையில் எதிர்ப்புக்கள் வெடித்தன. ஏனெனில் ஃபாக்ஸ்கான் ஆலையில் அதிகாரிகள் கொவிட் – 19 வெடிப்பைக் கட்டுப்படுத்தப் போராடினர். அதே நேரத்தில் உச்ச விடுமுறை காலத்திற்கு முன்னதாக உற்பத்தியை குறைய விடாது பராமரிக்கின்றனர்.










ஒன்லைனில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்ட வீடியோக்களில், எதிர்ப்பாளர்கள் உங்கள் உரிமைகளுக்காக எழுந்து நில்லுங்கள்! கூவுகின்றனர். அச்சமயம் கலகத்தடுப்பு பொலிஸார் உடனிருந்தமையையும் வீடியோக்கள் காட்டுகின்றன. ஒரு வீடியோவின் இருப்பிடம் செய்தி நிறுவனம் மற்றும் வீடியோ சரிபார்ப்பு சேவையான ஸ்டோரிஃபுல் மூலம் சரிபார்க்கப்பட்டது என்று ‘தி வோல் ஸ்ட்ரீட் ஜர்னல்’ தெரிவித்துள்ளது.

ஒரு நிலையான உற்பத்தி மையமாக சீனாவின் நிலையை பலவீனப்படுத்திய ஒரு வருட நிகழ்வுகளுக்குப் பிறகு, இந்த எழுச்சியின் அர்த்தம், அப்பிள் விநியோகச் சங்கிலியில் உள்ள ஆய்வாளர்கள் மற்றும் நபர்களின் கூற்றுப்படி, அப்பிள் தனது வணிகத்தின் பெரும் பகுதியை ஒரே இடத்தில் வைத்திருப்பதை இனிப் பொருத்தமானதாக உணரவில்லை.




கலந்துரையாடல்களில் ஈடுபட்டுள்ள நபர்களின் கூற்றுப்படி, சீனாவிற்கு வெளியே இந்த வேலையைச் செய்ய முயற்சிக்கத் தொடங்க வேண்டும் என்று அப்பிள் அதன் உற்பத்திக் கூட்டாளர்களிடம் கூறியுள்ளது.

இந்தியா மற்றும் வியட்நாம் போன்ற இடங்களும் NPI ஐச் (தேசிய வழங்குநர் மையம்) செய்ய முடியாவிட்டால், அவர்கள் இரண்டாவது பிடில் விளையாடுவதில் சிக்கித் தவிப்பார்கள் என்று விநியோகச் சங்கிலி நிபுணர்கள் கூறுகின்றனர். இருப்பினும், மெதுவான உலகப் பொருளாதாரம் மற்றும் அப்பிளில் பணியமர்த்தல் மெதுவாக இருப்பதால், புதிய சப்ளையர்கள் மற்றும் புதிய நாடுகளுடன் NPI பணிகளுக்கு பணியாளர்களை ஒதுக்க தொழில்நுட்ப நிறுவனத்திற்கு கடினமாக உள்ளது என்று கலந்துரையாடல்களில் இருந்த சிலர் கூறினர் என தி வோல் ஸ்ட்ரீட் ஜர்னல் தெரிவித்துள்ளது.

முன்னதாக நவம்பரில், ஃபாக்ஸ்கான் ஆலையில் ஏற்பட்ட சிக்கல்கள் அப்பிள் உயர்நிலை ஐபோன் 14 ஏற்றுமதிக்கான மதிப்பீடுகளை குறைக்க வழிவகுத்தது. அத்தோடு தாமதங்கள் குறித்து முதலீட்டாளர்களுக்கு ஓர் அரிய எச்சரிக்கையை வழங்கியது.

சீனா அப்பிளின் நெருக்கடியான விநியோகத்தை மேலும் நெருக்கடிக்குள்ளாக்குகிறது. மற்றும் சீனாவின் கடுமையான பூச்சிய – கொவிட் கொள்கை உலகளாவிய தொழில்நுட்ப நிறுவனங்களை எவ்வாறு பாதிக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகிறது.

(மூலம்: ‘பெர்ஸ்ட் போஸ்ட்’)

காலைக்கதிர் Kalaikkathir

# திருவிளக்குத் திருவிழா

## ஒரு நோக்கு

'ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே' என்று இறைவனை மனமெண்ணி துதிப்பதும், பிரார்த்தனை செய்வதும், பாடுவதும், ஆடுவதும், நடைமுறையில் இருந்து வருகிறது. இறைவனைக் கண்டோமா என்றால் அதற்குச் சரியான பதிலை எம்மால் சொல்லிவிட முடியாமலே இருக்கிறோம். ஆனாலும் இறைவன் இருக்கிறான் என்பதைப் பலரும் நம்பியே இவ்வுலகில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இறைவனைக் கல்லிலும், செம்பிலும், மண்ணிலும், மரத்திலும், பொன் னிலும், நிலத்திலும், நீரிலும், காற்றிலும், தீயிலும், ஒளியிலும் ஒலியிலும், மழையிலும், இடியிலும் என்று பலநிலையில் காண முற்படுகின்றோம். இந்த வகையில் ஒளிவடிவில் இறைவனை மனமிருத்தும் தத்துவார்த்தமான விழாவாக விளங்குவது தான் கார்த்திகை மாதத்தில் வரு



கின்ற 'திருவிளக்குத் திருவிழா' எனலாம்.

தீபத்திருவிழா என்றதும் 'தீபாவளி'பண்டிகைதான் எங்கள் மனதில் வந்து முதலில் நிற்பதாகும். உண்மையில் கார்த்திகையில் வருகின்ற விழாவினைத் தான் 'தீபாவளி' என்று கொள்ளுதல் வேண்டும் என்னும் ஒரு கருத்தும் இன்று பரலாகி வருகிறது. தீப + ஆவளி என்றால் தீபங்களை வட்டமாக வைப்பதாகும். கார்த் திகை விழாவிலும் தீபங்கள் வரிசையாயும் வட்டமாயும் வீட்டு வாசல்களில் வைக்கப்படுகிறது. கோவில்களிலும் வைக்கப்படுகிறது. எனவே கார்த்திகையில் வருகின்ற 'திருவிளக்கு விழா'வை 'தீப ஒளித் திருநாள்' என்றால் பொருந்தாதா என்று கேட்கும் நிலையும் உருவாகி வருகிறது.

தீபாவளி எனும்பொழுது ஆணவம் அடங்கிய நிலை அடையாளப்படுத்தப்படுகிறது. கார்த்திகை தீபத்திருவிளக்கு விழாவும் ஆணவம் அடங்கிய நிலையினயே காட்டி நிற்கிறது. தீபாவளியில் திருமால் இணைக்கப்படுகிறார். கார்த்திகை தீபத்திருவிளக்கு விழாவில் சிவன் இணைக்கப்ப டுகிறார். சிவன் என்பதோ திருமால் என்பதோ முக்கியமல்ல. இறை என்பதுதான் இங்கு முக்கியமாகும். அதாவது ஆணவம் அடங்கினால் இறையின் தரிசனம் கிடைக்கும் என்பதுதான் இதன் உண்மையான தத்துவமாக பொதிந்து கிடக்கிறது எனலாம்.

அடிமுடி தேடிய வரலாறு, ஆறுமுகப் பெருமான் தோன்றிய வரலாறு என்று பல வரலாறுகள் கார்த்திகை திருவிளக்குத் திருவிழாவுடன் தொடர்பு படுத்தப் படுகிறது. இங்கெல்லாம் முக்கியத்துவம் பெற்று நிற்பது ஒளியேயாகும் . அடி முடி வரலாற்றில் இறைவன் ஜோதிப் பிளம்பாக வந்தார் என்பதும், ஆறுமுகன் வரலாற்றில் இறைவனின் நெற்றிக் கண்ணில் தோன்றிய ஒளிப் பொறியே ஆறுமுகனாக கொள்ளப்பட்டார் என்றும் கருதும் நிலையில் ஒளிதான் முக்கியம் பெற்று நிற்கிறது.

ஆதிகாலத்து மனிதன் வாழ்க்கையில் ஒளி மிகவும் முக்கியத்துவம் மிக்கதாக அமைந்தது. இருளைக் கண்டால் பயந்த மனிதன் ஒளியைக் கண்டபொழுது உவகை உற்றான். ஒளி எப்படி வருகிறது என்பதை அவனால் அறிய முடியவில்லை. இதனால் ஒளி என்பது உயர்வானது என்னும் கருத்து அவனின் உள்ளத்தினுள் இறுக்கமாய் அமர்ந்து கொண்டே விட்டது எனலாம். மனித வரலாற்றில் ஏற்பட்ட பரிணாம வளர்ச்சியின் பின்னர் அறம் என்றும், நீதி என்றும், கடவுள் என்றும், சமயம் என்றும் ஏற்பட்ட பின்னரும் கூட ஒளியின் இருக்கை என்பதும் முக்கியத்துவத்தை இழக்காமலே தொடர்ந்து வந்து கொண்டே இருக்கிறது. அதன் நிலையினையே கார்த்திகை திருவிளக்குத் திருவிழாவாக மாறியிருக்கிறது என்றும் எடுத்துக் கொள்ளலாம்.

இந்து சமயத்தில் விளக்கு என்பது மிகவும் முக்கியத்துவம் பெற்று நிற்கிறது. எந்தவொரு நிகழ்ச்சியானாலும் விளக்கு இல்லாமல் அந்த நிகழ்ச்சி இடம்பெறவே மாட்டாது. மங்கலம் என்னும் அரிய கருத்து விளக்குடன் இணைக்கப்பட்டே விட்டது. விளக்கினை சகல செல்வங்களும் தரும் இலக்குமி ஆகவே ஆக்கியும் விட்டார்கள். இறைவழி பாட்டில் ஒளியின் இடம் மிகவும் இன்றியமையாததாகும். ஒளியின் அடையாளங்களாக பல விளக்குகள் கோவில்கள் தோறும் இருக்கின்றன. இறைவனுக்கு நடைபெறும் பூசையின் பொழுது காட்டப்படும் பலவித தீபங்கள் அனைத்துமே ஒளியின் வெளிப்பாடே எனலாம்.



கார்த்திகைத் திருவிளக்குத் திருவிழா என்றால் எல்லோர் எண்ணங்களிலும் திருவண்ணாமலைதான் முன்வந்து நிற்கும். அங்குதான் இவ்விழா மிகவும் பக்தி பூர்வமாக நீண்ட காலமாக நடைபெற்று வருகிறது. அது மட்டுமல்ல பஞ்சபூத தலங்களில் அக்கினிக்குரிய தலமாகக் கொள்ளப் படுவதும் திருவண்ணாமலைத் தலமே யாகும். அக்கினிக்கான தலத்திலே கார்த்திகைத் திருவிளக்கு விழாவினைச் செய்வதுதான் மிகவும் பொருத்தம் என்னும் ஐதீகம் தொடர்ந்து கொண்டே வருவதால் திருவண்ணாமலைக் கார்த்திகைத் தீப விழா இந்துக்களின் முக்கிய சமயவிழாவாக அமைந்து விட்டது.

திருவண்ணாமலையின் உச்சியில் மிகப்பெரிய தீபம் ஏற்றப்படுகிறது. மூன்று தொடக்கம் நான்கு நாள்கள் வரை எரியும் இத்தீபம் அறுபது மீற்றர்வரை ஒளியினைக் காட்டி நிற்கும். அண்ணாமலையில் ஏற்றப்படும் கார்த்திகைத் தீபம் என்பது திருவிளக்கின் விஸ்வரூபம் ஆகும் எனலாம்.

இத்தீபங்கள் ஏற்றப்படுவதால் பலனுண்டா என்னும் வினாவும் இல்லாமல் இல்லை. இந்து சமயத்தில் நம்பிக்கைகள் பல இருக்கின்றன. ஆனால் மூட நம்பிக்கைகளை விதைக்க முற்படுவதால்தான் கடவுளையோ சமயத்தினையோ கேள்விக்கு ஆளாக்கும் நிலை ஏற்படுகிறது. எக்காரியத்துக்கும் அர்த்தம் இல்லாமல் இந்து சமயம் இருக்கவில்லை. அர்த்தத்தை மக்கள் மனதில் அமர்த்திட அங்கு இறை நம்பிக்கையை இணைத்திருக்கிறது என்பதை விளங்கிக் கொண்டால் எந்தச் சிக்கலுக்கும் இடமிருக்காது.

பெருந்தீபங்கள் ஏற்றுவதால் புயல் தோன்றுவது தடுக்கப்படும் என்றும், அப்படிப் புயல் தோன்றுமாயின் அதன் வேகம் தணிக்கப்படும் என்று நம்பப்படுகிறது. திருவிளக்குகள் ஆன்மாவுக்கும் ஆண்டவனுக்கும் இடையில் உள்ள இணைப்பை உணர்த்தி நிற்கின்றன. விளக்கில் எரிகின்ற சுடரானது நமக்கு நன்றாகத் தெரியும் புறத்தோற்றமாகும்.

(10ஆம் பக்கம் பார்க்க)



## திருவிளக்கேற்றிடும் கார்த்திகைக் காலம்!

மாலயன் மருளது போக்கிய காலம்
மலரடி திருமுடி உணர்த்திய காலம்
தேவரும் தெரிசனம் கண்டநற் காலம்
திருவிளக்கேற்றிடும் கார்த்திகைக் காலம்

கந்தனை வந்தனை செய்திடு காலம்
கனற்பொறி குழந்தையாய் ஆகிய காலம்
நொந்திடு அடியவர் பலவினை போக்கிட
செந்திரு விளக்கதை ஏற்றிடும் காலம்

ஒளிர்வளர் விளக்காய் ஒளிர்ந்திடும் காலம்
தெளிவதைக் கருத்திலமர்த்திடும் காலம்
பொலிவுடன் பேரொளி தோன்றிய காலம்
போற்றியே தீபத்தை ஏற்றுவோம் வாரீர்

ஆண்டவன் நினைப்பை அகற்றிய ஆணவம்
தாண்டவம் தகர்ந்த தகைவுடைக் காலம்
நீண்டிடும் மாயையை நிர்மலமாக்கிய
நிலைபெறு சக்தியை உணர்த்திய காலம்

நெறிபிறள் நினைப்பினை நீக்கிய காலம்
அறிவெனும் உண்மையை அமர்த்திய காலம்
பொறிபுலன் சிவனருள் புகுத்திய காலம்
போற்றிடும் கார்த்திகை பொன்னிகர் காலம்

ஆலயம் எங்கனும் தீபங்கள் ஒளிரும்
அனைவரும் தீபத்தை நாடியே நிற்பார்
வீதிகள் வீடுகள் ஒளியினை நல்கும்
விளக்குகள் ஏற்றிடும் சிறப்புடைக் காலம்

ஒளியிலே இறையினை இருத்திடும் காலம்
உவப்புடன் தீபத்தை ஏற்றிடும் காலம்
மனவிருள் போக்கிட வந்திட்ட காலம்
மண்ணிலே மலர்திட்ட மாண்புடைக் காலம்

அண்ணா மலையினை அகத்தில் அமர்த்திட
உண்ணா முலையான் ஒளிர்ந்திட்ட காலம்
அருட் பெரும்ஜோதி தனிப்பெருங் கருணை
அளவிலா ஆற்றலை அருளிய காலம்

மரத்தில் மறைந்த மாமத யானையை
பரத்தில் மறைந்த பார்முதல் பூதத்தை
இருத்தி மனத்தில் ஏற்றுவார் தீபத்தை
கொளுத்துவார் சொக்கப் பனையைக் கோவிலில்

மாதொரு பாகனை மனமதில் இருத்தி
மங்கலம் பொங்கிட தீபத்தை யேற்றி
தீமைகள் அகல கார்த்திகை விளக்கை
சிறப்புடன் ஏற்றிடச் சேருவோம் வாரீர்


விஞ்ஞான உண்மை விளக்கினில் இருக்கு
மெஞ்ஞானம் அதனுள் வியாபித்தே இருக்கு
ஒளியினை அறிவாய் கொண்டிடும் வேளை
ஒளியினை உணர்வாய் ஆக்கிடும் சமயம்

இருளது சூழின் எதுவுமே தெரியா
இருளது இருப்பு மருளவே வைக்கும்
ஒளியது வந்தால் தெளிவது பிறக்கும்
தெளிவது சிவமாய் ஒளியென ஒளிரும்

அகமதில் இருளை அகற்றிட வேண்டும்
அருளெனும் ஒளியை இருத்திட வேண்டும்
அருளெனும் ஒளியை அளிப்பது இறையே
இறையினை எண்ணி ஏற்றுவோம் விளக்கினை

- மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா -

# திருவண்ணாமலையில் கார்த்திகை தீபம்




கைலாயத்தில் ஈசன் ஏகாந்த தவத்தில் ஆழ்ந்திருந்த போது உமை, ஈசனின் பின்புறமாய் வந்து நின்று விளையாட்டாய் அவர் இரு கண்களைப் பொத்தினாள். அதனால் உலகம் இருண்டது. ஈசனின் வல, இடக் கண்களான சந்திர, சூரியர்கள் களையிழந்தனர். நெற்றிக் கண்ணாகிய அக்னியும் அன்னையின் கைவிரல் பட்டுக் குளிர்ந்து போனது. அதனால் வேள்விகள் தடைப்பட்டன. யாகங்களும், பூஜைகளும் இல்லாமல் போயின. உலகத்தில் அருள் ஒழிந்தது. இருள் சூழ்ந்தது. உலகங்கள் இருண்டதால் முனிவர்களும், தேவர்களும் அஞ்சினர். மதி மயங்கினர். கடமைகளை மறந்து முடங்கினர். அதனால் உலகம் தன்நிலையிலிருந்து தவறியது. அடி அண்ணாமலையில் இருந்துஇதனால் சினம் கொண்டார் ஈசன். உமை விளையாட்டாய் இந்தச் செயலைச் செய்திருந்தாலும் அது மிகப் பெரிய தவறு என்பதால், அன்னையைச் சபித்தார்.அன்னை அஞ்சி நடுங்கி பிழை பொறுக்குமாறு வேண்ட, தேவி, நீ விளையாட்டாகச் செய்தாலும் தவறு, தவறுதான். ஆதலால் நீ பூவுலகம் சென்று தவம் மேற்கொள்வாயாக! தக்க காலத்தில் யாம் வந்து உம்மை ஆட்கொள்வோம்' என்று கட்டளையிட்டார்.அன்னையும் அவ்வாறே ஈசனின் கட்டளைப்படி பூவலகிற்கு வந்து தவம் செய்ய ஆரம்பித்தாள். அவ்வாறு அன்னை தவம் செய்து ஈசனின் அருள் பெற்று, சாப நிவர்த்தியான தலம் தான் அண்ணாமலை. சாப நிவர்த்தி மட்டுமல்ல, ஈசனின் உடலில் சரி சமமாக இடப்பாகம் பெற்றாள். அன்னை கார்த்திகை மாதத்தில் கார்த்திகை விரதம் இருந்து, கார்த்திகை நட்சத்திரத்தில் ஈசனின் இடப்பாகம் பெற்ற அந்த நன்னாள் தான் கார்த்திகை தீபப் பெருநாளாகக் கொண்டாடப்படுகிறது

### திருவண்ணாமலை சிறப்புகள்

1. திருவண்ணாமலையில் ஏற்றப்படும் கார்த்திகை தீபத்தை நேரில் பார்ப்பவர்களின் 21 தலைமுறைக்கு முக்தி கிடைக்கும்.

2. திருவண்ணாமலை தீபத்தன்று மலையை பார்த்து நமசிவாய சொன்னால், அந்த மந்திரத்தை 3 கோடி தடவை உச்சரித்த புண்ணியம் கிடைக்கும்.

3. திருவண்ணாமலை உச்சியில் தீபம் ஏற்றப்படும் போது மலைக்கு உள் பகுதியிலும் பூஜைகள் நடக்கும் ஒலி கேட்டதாக ரமணர், சோத்திரி சுவாமிகள் உள்பட பல அருளாளர்கள் கூறியுள்ளனர்.

4. திருவண்ணாமலையில் கார்த்திகை தீபம் ஏற்றப்பட்ட பிறகு அதைப் பார்த்து வணங்கியபடி கிரிவலம் வந்தால், அந்த ஜோதியின் கதிர்கள் நம் உடம்பில் பட்டு ஆன்மசக்தி அதிகரிக்கும் என்பது ஐதீகம்.

5. தீபத் திருநாளில் 5 தடவை (மொத்தம் 70 கி.மீ. தூரம்) கிரிவலம் வந்தால், அவர்கள் எவ்வளவு பெரிய பாவம் செய்திருந்தாலும், அவற்றில் இருந்து முழுமையான விமோசனம் கிடைக்கும் என்று புராணங்களில் கூறப்பட்டுள்ளது.

6. மலை மீது தீபம் ஏற்றப்படும் போது, தீப மங்கள ஜோதி நமோ, நம என்ற பாடலை பாடி வழிபட்டால் வாழ்வில் மங்களம் பெருகும்.

7. கார்த்திகைத் தீபத்துக்கு மூன்றாவது நாள் மலையை பஞ்ச மூர்த்திகளும் வலம் வருவது மிகச்சிறப்பாக நடைபெறும்.

8. திருவண்ணாமலை கார்த்திகை தீபத்தை காண சித்தர்கள் வருவார்கள் என்பது நம்பிக்கை. அப்படி வரும் சித்தர்கள் மலை உச்சியில் தீபம் ஏற்றும் கொப்பரை நெய்யில் சக்தி வாய்ந்த மூலிகைத் தைலங்களை சேர்த்து விடுவதாகச் சொல்கிறார்கள். இதனால் தீபத்தில் இருந்து வெளிப்படும் புகை தீய சக்திகளை அழிப்பதாக கருதப்படுகிறது.

9. திருவண்ணாமலை மலை சுமார் 2,668 அடி உயரம் கொண்டது. கீழ் இருந்து மலை உச்சி வரை செல்ல சுமார் 8 கி.மீ. பாதை உள்ளது. மலை ஏற சுமார் 4 மணி நேரமாகும்.

10. திருவண்ணாமலை கார்த்திகை தீபத்துக்கு, சர்வாலய தீபம், கார்த்திகை விளக்கீடு, ஞானதீபம், சிவஜோதி, பரஞ்சுடர் என்றும் பெயர்கள் உண்டு.

11. கார்த்திகை தீபத்தன்று கிரிவலம் செல்பவர்களுக்கு ஆயிரம் அசுவமேத யாகம் செய்த பலன் கிடைக்கும்.

12. கார்த்திகை தீபம் தினத்தன்று சிவலிங்கம் முன்பு நெய் தீபம் ஏற்றி வழிபாடு செய்தால், அவர்களது வாழ்க்கை பிரகாசமாக இருக்கும் என்பது நம்பிக்கை.

13. கார்த்திகை தீபம் ஏற்றப்படும் காட்சியை நேரில் பார்த்து வழிபடுபவர்களுக்கு சகல தானம் கொடுப்பதால் கிடைக்கும் புண்ணியங்கள் கிடைக்கும்.

14. கார்த்திகை மாதம், கார்த்திகை நட்சத்திரத்தில் திருவண்ணாமலை தலத்தில் ஏதாவது ஒரு இடத்தில் தீபம் ஏற்றி வழிபட்டால் குழந்தை பாக்கியம் கிடைக்கும்.

15. திருவண்ணாமலை மலை உச்சியில் தீபம் ஏற்ற பயன்படுத்தும் கொப்பரை சுமார் 2 ஆயிரம் லிற்றர் நெய் பிடிக்கும் அளவு கொண்டது.

16. மலை உச்சியில் ஏற்றப்படும் தீபத்தின் ஒளி சுமார் 20 கிலோ மீட்டர் தொலைவுக்கு தெரியும்.

17. இந்த தீபம் சுமார் 11 நாள்கள் தொடர்ந்து எரியும் என்பது குறிப்பிடத்தக்கது.

18. திருவண்ணாமலையில் கார்த்திகை தீப திருவிழாவை முன்னிட்டு, பரணி தீபம், அண்ணாமலையார் தீபம், விஷ்ணு தீபம், நாட்டுக் கார்த்திகை தீபம், தோட்டக் கார்த்திகை தீபம் என 5 வகையான தீபங்கள் ஏற்றப்படும்.

19. சிவபெருமான் கார்த்திகை தீபநாளில் அக்னியில் நடனம் ஆடுவதாக ஐதீகம். இந்த நடனத்துக்கு முக்தி நடனம் என்று பெயர்.

20. கார்த்திகை தீபம் தினத்தன்று ஆலயங்களில் சொக்கப்பனை கொளுத்துவார்கள். ஆனால் திருவண்ணாமலையில் சொக்கப்பனை கொளுத்தும் பழக்கம் இல்லை.

21. தீப நாளில் மலை மேல் தீபம் காண முடியாதவர்கள், தீப தரிசன நேரத்தில் அதை நினைத்தாலே, அதற்குரிய பலன்கள் கிடைக்கும் என்பது பெரியோர் வாக்கு.

22. திருவண்ணாமலை கார்த்திகை தீபத்துக்கு நிகராக இதுவரை எந்த ஆலயத்திலும் ஜோதி வழிபாடு ஏற்பட்டதில்லை.

23. திருவண்ணாமலையில் ஏற்றப்படும் கார்த்திகை தீபம், அண்டசராசரங்களுக்கும் தீப விளக்காக கருதப்படுகிறது.

24. திருவண்ணாமலையில் ஏற்றப்படும் தீபம், உலகத்தை எல்லாம் இயக்குகின்ற பரம்பொருள் ஒன்றே என்பதை இறைவன் ஒருவனே என்ற தத்துவத்தை உணர்த்துகிறது.

25. கார்த்திகை தீபத்தன்று அதிகாலை திருவண்ணாமலை



கோவிலில் பரணி நட்சத்திர நேரத்தில் ஏற்றப்படும் பரணி தீபத்தை அங்குள்ள சொர்ண பைரவர் சன்னதியில் வைத்து விடுவார்கள். பிறகு மாலையில் அதைத்தான் மலை உச்சிக்கு எடுத்துச் சென்று தீபத்தை ஏற்றுவார்கள்.

26. திருவண்ணாமலை தீபத்தை காண கடந்த ஆண்டு தோறும் 20 லட்சம் பக்தர்கள் திரள்வர்.

27. திருவண்ணாமலை மலை உச்சியில் தீபம் ஏற்றப்பட்டதும் வணங்கினால் பாவம் நீங்கி பிறவிப் பிணியை அறுக்க வல்லது என்பது ஐதீகமாகும்.

28. திருவண்ணாமலையில் தீபம் ஏற்றப்பட்டதும், அண்ணா மலையாருக்கு அரோகரா என்று பக்தர்கள் முழக்கமிடுவார்கள். இதற்கு என்ன அர்த்தம் தெரியுமா? இந்த உடம்பு நான் என்னும் எண்ணத்தை அழித்து, மனதை ஆன்மாவில் அழித்து, உள்முகத்தால் அத்வைத ஆன்ம ஜோதியைக் காண்பது தான் இந்த தீப தரிசனம் ஆகும் – இதை சொன்னவர் ரமண மகரிஷி.

29. பஞ்சபூத தலங்களுக்குள் இது நெருப்புக்குரிய தலம். இங்கு மலையே இறைவனின் சொரூபமாக உள்ளது.

**வி.ரி.சகாதேவராஜா, (காரைதீவு நிருபர்)**

# திருவிளக்குத் ......

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் அந்தச் சுடரானது எண்ணெயை மெல்ல மெல்ல கிரகித்தே எரிகிறது என்பது நாமுணரவேண்டிய அகத் தோற்றமாகும். வாழ்க்கையில் தெளிவான புறத் தோற்றத்தையும் அதற்கு அடிப்படையான நுட்பமான புறத்தோற்றத்தையும் உணர்ந்து செயற்பட வேண்டு என்பதை எடுத்துக்காட்டி நிற்பதே தீபவளிபாட்டின் உட்கருத்தாகும்.

மிருகத்துடன் காட்டில் வாழ்ந்த மனிதன் நாளடைவில் காட்டைவிட்டு நாட்டுக்கு வருகிறான். நாட்டினை உருவாக்கி தனது வாழ்வினை வளமாக்குகின்றான். அவ்வழியில் சமயம் முகிழ்க்கிறது. கடவுள் நம்பிக்கை எழுகிறது. மனிதனே தனக்கான வழிபாட்டு முறைகளை உருவாக்குகிறான். இங்குதான் நம்பிக்கை என்பது தலைமை வகிக்கிறது. அந்த நம்பிக்கைதான் கடவுளையே தோற்றுவிக்கிறது. நம்பிக்கையின் அடிப்படையில் பல கதைகள் உருவாகின்றன. அக்கதைகள் நம்பக்கூடியனவா, நம்ப முடியாதனவா என்பது விவாதம் அல்ல. அக்கதைகள் மனிதனை நல்வழிப் படுத்த உதவியாய் அமைந்தன என்பதை மறுத்துவிட முடியாது.

இந்த வகையில் உருவான பல புராணங்களை விமர்சனம்செய்வதோ அல்லது கிண்டல், கேலி செய்வதோ பொருத்தம் உடையதாகத் தெரியவில்லை. தத்துவங்களை அப்படியே சொன்னால் ஏற்றுக் கொள்ளுவது என்பது மிகவும் கடினமாகும். அதனால் சாதாரண மக்களும் விளங்கிக் கொள்ளும் வண்ணம் உண்மைகளும் தத்துவங்களும் நல்லவடிவில் கதை என்னும் வடிவமாக்கப்படும் தேவை அவசியமானது. அந்தவகையில் கார்த்திகை திருவிளக்கு விழா பற்றி புராணக்கதைகள் பல இருக்கின்றன. அவற்றை நம்புவதா ? அப்படியெல்லாம் நடக்குமா? என்றெல்லாம் எண்ணும் பாங்கினை விட்டுவிட்டு மனித வாழ்வினை வையத்துள் வாழ்வாங்க வாழ உதவும் நல்ல கருத்துக்களை சமயத்தின் ஊடாகவும் இறையென்னும் மெய்பொருளின் ஊடாகவும் காண்பதும் கருத்திருத்துவதுமே பண்புடை செயலாகும். அந்த வகையில் கார்த்திகைத் திருவிளக்கு விழாவினை மனமிருத்துவோம்.ஒளிமயமாக இறைவனைக் காண்போம். ஒளிமயமான எதிர்காலத்தை எதிர்பார்த்து இருப்போம். ஜோதிப் பிளம்பாக இறையினைக் காணுவோம்!

காலைக்கதிர் Kalaikkathir

**இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.**

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## புலம்பெயர் பகுதிகளின் வரலாற்றுச் செருக்கு



- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம் - 203**

தமிழ் மக்களது போராட்ட வரலாற்றை அவர்களது அடுத்த சந்ததியினருக்கு எடுத்துச் செல்ல வேண்டிய கடமை அவர்களுக்கு உண்டு. அதில் மாற்றுக் கருத்துக் கிடையாது.

ஆனால், எதை எடுத்துச் சொல்ல வேண்டும்? அவர்களது நியாயமான போராட்டங்களை, அவை விதைத்த வீர தீரங்களை, தரப்பட்ட அர்ப்பணிப்புகளையா? அன்றில் அவற்றோடு இணைந்தே வளர்ந்த குரோதங்கள், பிரிவினைகள் என்பவற்றையா?

அரசியல் கட்சிகளிடையே இருந்த பிரிவினைகள், முரண்பாடுகள், பின் விடுதலைக் குழுக்கள் இடையே இருந்த போட்டிகள், இவை ஆயுதங்களால் தீர்க்கப்பட்டு, அவற்றுக்காக பிரசாரப்படுத்தப்பட்ட நியாயங்கள், பின் தங்களை ஏகோபித்த தலைவர்களாக ஸ்தாபித்துக் கொண்டு அந்தப் பலங்களில் விடுதலைப் புலிகள் முன்னெடுத்த தகைமைகள், பின்னர் எழுந்த பிரிவினைகள், இவற்றால் தமிழர்களின் கோரிக்கைக்கானஆயுதப் போராட்டம் தோற்றுப் போனமை அல்லது அடக்கப்பட்டமை யாவுமே வரலாறுதான். பாடங்கள் தரும் வரலாறுகள்.

தமிழ் மக்கள் மீது ஆயுதப் போராட்டம் திணிக்கப்பட்டு, அதனை அவர்கள் கையில்



எடுத்துப் போராடி தோற்று விட்டார்கள் என்பதால் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கை தோற்றுப் போகவில்லை. அது சரியாக – நியாயமாக – தீர்க்கப்படும் வரை சிலிர்த்துத்தான் நிற்கும்.

அதை எப்படி அடைவது என்பதைத் தமிழ் மக்கள் ஆக்கபூர்வமான வழிகளில் சிந்திக்க வேண்டும். அதற்காக முதலில் தங்களுடைய வளங்களை அவர்கள் கணக்கெடுக்க வேண்டும். ஆதரவு தளங்களைப் பலப்படுத்த வேண்டும். அவர்களை (ஆதரவு தளங்களை) நம்ப, அவர்கள்(ஆதரவு தளங்கள்) தமிழ் மக்களை



நம்பக் கூடிய விதத்தில் உறவுகளை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

தமிழ்ப் பிரதேசங்களைப் பார்த்தால் மக்கள் நலிவுற்று இருக்கிறார்கள். விரக்தி மனப்பான்மை. வாழ்வாதாரத்துக்கு ஏற்ற நம்பிக்கையான அபிவிருத்தி இல்லை. இரந்து உண்ண வேண்டிய நிலையிலே உதவிக் கரங்களையே எதிர்பார்த்து இருக்கிறார்கள். ஏதோ குடும்பத்தின் உறவுகளில் ஒன்றோ, இரண்டோ புலம்பெயரில் இருப்பதால் அவர்களை நம்பி வாழ்வை நடத்துகிறார்கள்.

தேசிய அரசியல் பேசுபவர்கள், வாழ்வாதாரம், அபிவிருத்தி பற்றி பேசியமையைத் தவிர, நடைமுறை திட்டங்களை வகுத்தவர்களாக இல்லை. அந்த அரசியல் கட்சிகளில் பெரும்பான்மையில் அங்கத்தினர் 50, 60, 70 ஐத் தாண்டியவர்கள். இளைஞர்கள் அவர்களை நாடவிட்டதும் இல்லை, அவர்களும் இவர்களை ஏமாற்றியவர்களாக – தங்களது எதிர்காலங்களைச் சூறையாடியவர்களாகவே – பார்க்கிறார்கள் – எது வித நம்பிக்கையுமற்று.

மற்ற கட்சிகளின் நிலையும் அதுதான். 50,60 வயதைக் கடந்த தலைவர்கள். அவர்களது அங்கத்துவ பரப்பிலும் மக்களோ இளைஞர்களோ ஆர்வம் காட்டவில்லை.

சுருக்கமாகப் பார்த்தால் நாட்டின் அடுத்த தலைமுறை இங்குள்ள தலைவர்களின் மீது நம்பிக்கை வைக்கவில்லை. வெளியேறினால் போதும் ஏதும் பிழைத்துக் கொள்ளலாம் என இருக்கின்றவற்றையும் விற்றுச் சுருட்டி லட்சம் லட்சமாக முகவர்களிடம் கொடுத்து ஏமாந்து நிற்கும் பரிதாபங்கள்.

அந்தத் தலைமுறையின் இன்னும் ஓர் அங்கம் சமுதாயத்தில் பழி தீர்க்க வாள்வெட்டுகளிலும் எதுக்கும் திராணியற்று சிலர் போதை வஸ்துகளுக்கும் அடிமையாகி வாழ்வை தொலைப்பதும்தான் இருக்கின்ற சந்ததியாக சமூக கண்ணாடிகள் பிரதிபலிக்கின்றன.

இவற்றுக்குள் அடங்காதவர்கள் எங்களை விட்டால் கானும் என்ற மனபாங்கிலே வாழ்ந்து விட்டால் போதும் என வாழ்க்கையை கடத்துகிறார்கள்.

ஆனால் அவர்கள் எல்லோருமே ஒட்டு மொத்தமாக, புலம்பெயர் மக்கள் தங்களுக்காக தங்கள் மக்களின் உரிமைகளுக்காக பலமான நடவடிக்கைகளும் முன்னெடுப்புகளும் செய்கிறார்கள் என்று நம்புகிறார்கள். புலம்பெயர் தமிழ் மக்கள் பலம் வாய்ந்த நிலைகளில் இருக்கிறார்கள் என்று ஶ்ரீலங்கா அரசு கூட நம்புகிறது. உதவிகள் பெறலாம் என்று எதிர்பார்ப்பில் பேச்சுக்களில் தீர்வுகள் தரப்படலாம் என்ற தூண்டில்கள் போடப்படுகின்றன.

ஆனால் ஒவ்வொரு புலம்பெயர் நாட்டிலும் தமிழ் மக்களது பண்பியல்பு மாறாது, பல குழுமங்கள் தனி மரங்களாகதான் இயங்குகின்றன. அவை தோப்புக்களாக மாற அவர்களுக்கிடையே எத்தனையோ பிணக்குகள், முரண்பாடுகள் தடையாக உள்ளன. ஒருமைப்பாடான நிலை ஒன்றில் தமிழ் புலம்பெயர் சமூகம் தங்களது கோரிக்கையின் நிலைப்பாடுகளை சமர்ப்பிக்காத வரையில் சர்வதேச நாடுகளின் அனுசரணையானது வெறும் அனுதாபத்தில் – மனிதநேயத்தில் – இருக்குமே ஒழிய நடவடிக்கைகளுக்கான ஏற்பாடுகள் ஆவதற்கு சந்தர்ப்பம் இல்லை.

'ஆறப் போட்ட கஞ்சி பழம் கஞ்சி' என்பதையும், சில பிரச்சனைகள் தீர்க்கப்படாமலே விட்டால் அவை தூர்ந்து போகும் என்பதையும் பேராண்மை தரப்புகள் அறிந்து கொண்டே கடந்த 75 வருட காலமும் செயற்பட்டன. அவை தமிழ் மக்களின் கோரிக்கைகளின் அடிமட்டங்களில்தான் ஊடுருவின. இந்தக் காலங்களில் ஒரு மில்லியனுக்கு மேற்பட்டவர்கள் வன்முறைகளாலும் வாய்ப்புகள் அற்ற நிலையிலும் வெளியேறி விட்டார்கள்.



இன்றும் அந்த மனோபாவம் தொடர்கிறது. காணிகள், வளங்கள் சூறையாடப்படுகின்றன. பிரதேசத்தின் அபிவிருத்தி திட்டங்கள் கூட அவர்களின் (பேராண்மையின்) கைகளில் இருக்க வேண்டும் என்ற மனப்பான்மையிலேயே அவர்கலின் தீர்வு திட்டங்கள் அமைகின்றன.

மாவட்ட அபிவிருத்திக் சபைகளை அல்லது மாகாண சபைகள் முன்னெடுக்கும் முன்னரே அதற்கான கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டு ,வடமாகாண அபிவிருத்திக்கான காரி–யாலயம் ஜனாதிபதியின் அலுவலகத்திலேயே அமைக்கப்பட்டாயிற்று. அவசரமாக அவர் அதற்கு வவுனியாவிலும் உதவிக்காரியாலயம் திறந்தார். தனது நோக்கமே வடபகுதி அபிவிருத்தி பற்றி அந்தப் பிரதேச அங்கத்தவருடன் பேசுவது என அவர் குறிப்பிட்டாலும், நடைபெற்றவை தொடர்பான ஊடகச் செய்திகளாலும் நாடாளுமன்ற பேச்சுக்களாலும் இப்பொழுது அவை நாடாளுமன்ற சர்வகட்சிப் பேச்சுக்களை அண்டி இருக்கின்றன எனத் தோன்றுகிறது. மாவட்ட அபிவிருத்தி சபைகள் ஏற்கப்படாது விடப்பட்டால், ஜனாதிபதி அமைத்துள்ள இந்த கட்டமைப்பின் பங்கு என்ன? 13 ஆம் திருத்தம் நடைமுறைப் படுத்தப்பட்டோ, சமஷ்டிக்கான இணக்கத்தில் மேல் நகர்வதானால் யாருடைய அதிகாரங்களில் இந்த கட்டமைப்பு இயங்கும்? ஆக, ஜனாதிபதி ரணில் வரக்கூடிய சர்வதேச நிதிகளை வடக்குக்கான அபிவிருத்திக்கு என கோடிட்டு வந்தால் அதனை ஜனாதிபதியின் அதிகாரத்தில் வைப்பதற்கு கட்டமைப்பை ஏற்படுத்த பேச்சுவார்த்தையை நடத்துகிறார். அவ்வளவே.

இங்குதான் புலம்பெயர் சமூகம் கூட, தங்களது அரசியல் கொள்கைகளை யதார்த்தத்தில் முன்னெடுக்க இருப்பவற்றைத் தக்க வைத்து, சர்வதேச அரசுகளின் அனுசரணையில் முன்னேறாது, பிரிந்து நின்று, பிசுபிசுத்து, வழவழாவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். சர்வதேச மனித உரிமை மன்றின் தீர்மானத்தின் வழியாக சுயநிர்ணய அடிப்படையில், சர்வதேச வாக்கெடுப்பின் மூலம், சுயாட்சி அமைப்பது என்ற சட்டபூர்வமான வழிமுறையை நாடு கடந்த தமிழீழ அரசும், அதன் சார்புள்ள சில தன்னியல்புகளில் இயங்கும் அமைப்புகளும் ஆதரிக்கின்றன. இவை யாபேரும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் அனுகுமுறைகளும் உண்டென நம்பிக்கையைத் தமிழ் மக்களுக்கு தருகிறார்கள். இது சட்ட ரீதியாக வாஸ்தவம்தான் .ஆனால் அவற்றில் உள்ள புவியியல் அரசின் தன்மைகள், எடுக்கப்படக்கூடிய கால வரம்புகள் பற்றி பேச்சு எடுப்பதில்லை. அறிக்கைகள்தான் விடப்படுகின்றன

சம்பந்தன் தமிழ் கூட்டமைப்பிம் தலைமையை ஏற்று, போரின் முடிவில் இருந்து இந்த 13 வருடங்களில் செய்த அரசியலும் அதன் பெறுபேறுகளும் போன்றே, போரின் முடிவில் உருவாகிய நாடு கடந்த தமிழீழ அரசும் இந்தப் பதின்மூன்று வருடங்களில் ஆண்டுக்கு ஆண்டு நாடாளுமன்ற அமர்வுகளை ஏற்படுத்தி, சர்வதேசத் தீர்மானங்கள், வட்டுக்கோட்டை தீர்மானத்தின் வழியே, ஏற்படுத்தியமையை ஒழிய, நிதர்சனமாக சர்வதேசத்தில் எந்த ஒரு நாட்டையும், அது பிரித்தானியா, கனடா அல்லது ஆஸ்திரேலியா கூட இறைமையை மீட்டு பெறுவது, அன்றில் தமிழ்ப் பிரதேசங்களில் சுயாட்சியாக பிரிவதுதான் இனப் பிரச்சனைக்கு வழி என்ற கோட்பாடுகளுக்கு ஏற்றுக் கொள்ள வைக்க முடியவில்லை.

காலம் மாறினால் நல்லது நடக்கும் என்று காலங்களோடு நடக்கிறார்கள். ஆனால் காலன் இறைமையை அறுத்தெறிந்து விட்டு, திரௌபதி போல் பிரதேசங்களையும் துகிலுரிக்கிறான் என்ற அழுகுரலை இந்த புலம்பெயர் கிருஷ்ணர்கள் ஏனோ கேட்பதில்லை.

(வளரும்...)

காலைக்கதிர் Kalaikkathir

## முக்கிய தூதர்களுடன் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரித்தானிய உயர்ஸ்தானிகர், ஜப்பானிய தூதுவர், அமெரிக்க தூதுவர், இந்திய உயர்ஸ்தானிகர் மற்றும் ஆஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

இந்த சந்திப்பில் இருதரப்பு அபிவிருத்தி ஒத்துழைப்பு தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் இராஜதந்திர பிரதிநிதிகளுக்கும் இடையில் கருத்துப் பரிமாற்றம் இடம்பெற்றதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## நாடாளுமன்றத்துக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீண்டும் கூடும்.

நாடாளுமன்றம் செவ்வாயன்று 13ஆம் திகதி கூடும் நிலையில் அதற்குப் பின்னர் ஜனவரி 17ஆம் திகதியே மீண்டும் கூடவுள்ளது.

வரவு - செலவுத் திட்ட ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் மீதான இறுதி வாக்கெடுப்பு நாளை வியாழக்கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

பெறுமதி சேர் வரி (திருத்தம்) மற்றும் உள்நாட்டு இறைவரி (திருத்தம்) சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் அடுத்த நாள் 9 ஆம் திகதி நடைபெற உள்ளது.

அதன்பிறகு, எதிர்வரும் 13 ஆம் திகதி வாய்மொழி கேள்விகளுக்குப் பதில் அளிக்க நாள் ஒதுக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்றவிவகாரக்குழுதெரிவித்துள்ளது.

## நாடாளுமன்றத்துக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆயிரத்து இருநூறு கடலட்டை பண்ணைகள் இருக்கின்றன எனவும் இந்தப் பண்ணைகளை ஐயாயிரமாக உயர்த்த வேண்டுமென்றும் அதற்கான நடவடிக்கைகளைத் தான் எடுப்பார் எனவும் ஊடகங்கள் ஊடாகசெய்திகளைவெளியிட்டுள்ளார். கடலட்டைகள் என்பது மிக விலை மதிப்புள்ள ஏற்றுமதிப்பொருள் என்பதில் மாற்றுக்கருத்துகள் இல்லை. முன்னரும் பாக்குநீரிணை மற்றும் மன்னார் வளைகுடாவிலிருந்து கடலட்டைகள் பிடிக்கப்பட்டு ஏற்றுமதி செய்யப்பட்டன. ஆனால் இப்பொழுது கடலட்டை பண்ணைகளை உருவாக்கி, அதன் மூலம் பாரிய அந் நியச் செலாவணியைக் கொண்டுவர முடியுமென்றும் குறுகிய காலத்திற்குள் மீனவர்கள் பெரும் பணம்படைத்தவர்களாக மாறலாம் என்றும் அமைச்சரினால் ஆசை வார்த்தைகள் கூறப்படுகின்றன.

கடலட்டைப் பண்ணைகள் அமைப்பதெற்கென்று சில வரைமுறைகள் இருக்கின்றன. இரண்டுகடலட்டைப்பண்ணைகளுக்கு இடையில் ஏறத்தாழ 1000 மீற்றர் இடைவெளி இருக்க வேண்டும் என்று கூறப்படுகின்றது. உருவாக்கப்பட்டுள்ள பண்ணைகளில் அத்தகைய இடைவெளியில்லை என்பது மீனவர்களின் குற்றச்சாட்டுகளாக இருக்கின்றன.

இரண்டாவதாக அப்பிரதேசங்களில் உள்ள மீனவர்களுக்கு பண்ணைகளை வழங்குவதை விடுத்து, அப்பிரதேசங்களைச் சாராதவர்களுக்கும் வெளியாள்களுக்கும் அந்தப் பண்ணைகள் வழங்கப்படுவதாகவும் குற்றச்சாட்டுகள் எழுகின்றன.

மூன்றாவதாக குறுகிய காலத்திற்குள் வருமானம் ஈட்ட முடியுமென்று மீனவர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர். ஆனால் புத்தளம், சிலாபம் போன்ற இடங்களில் இறால் பண்ணையில் ஏற்பட்ட இழப்புகள் கடலட்டைகள் பண்ணைகளுக்கும் ஏற்படலாம் என்ற அச்சமும் ஐயமும் தோன்றியுள்ளன. கடலட்டைப் பண்ணைகளைத் தோற்றுவிப்பதன் ஊடாக, பாரம்பரியமாக எமது மீன்பிடி, அதனூடாக வடக்கு மாகாணம் பெற்றுவந்த கடலுணவுகள், ஆயிரக்கணக்கான கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரங்கள் இவையெல்லாம் அழிந்துவிடுமோ என்ற அச்சமும் ஏற்பட்டுள்ளது.

பல்வேறுபட்ட இடங்களில் அமைசசரின் பினாமிகளின் பெயரில் கடலட்டைப் பண்ணைகளுக்கான நிறுவனங்கள் திறக்கப்படுவதாகவும் அதன் பெயரில் பண்ணைகள் உருவாக்கப்படுவதாகவும் இதனால் அந்த பிரதேசத்து மீனவ மக்களுக்கு தொழில் செய்யும் வாய்ப்புகள் மறுக்கப்படுவதாகவும் கூறப்படுகின்றது. முன்னர் மீனவர்கள் தொழில் செய்த இடங்களில் பண்ணைகளை உருவாக்குவதன் ஊடாக, அந்த மீனவர்களுக்கான பாரம்பரிய தொழில் வாய்ப்புகள் மறுக்கப்படுவதாகவும் குற்றம்சாட்டப்படுகின்றது. இதன் காரணமாகவே பல்வேறு மீனவ சங்கங்களும் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளன.

இவை ஒருபுறமிருக்க, 5,000 பண்ணைகளுக்கான கடலட்டை குஞ்சுகளைக் கொடுக்கப்போவது யார் என்று பார்த்தால் அது யாழ்ப்பாணத்தில் ஏற்கனவே மையம்கொண்டுள்ள சீன நிறுவனம் ஒன்றே இந்த கடலட்டை குஞ்சுகளை விநியோகிக்கப்போகும் ஏக விநியோகஸ்தர்களாக இருக்கப்போகின்றனர். இந்தச் சீன நிறுவனம், கடலட்டை குஞ்சு பொரிப்பதற்கான தொழில்நுட்பத்தை உள்ளூர் மீனவர்களுடன்பரிமாறிக்கொள்வதற்குத் தயாரில்லை. அந்த தொழில்நுட்பம் ஏகபோக உரிமையாக சீனர்களின் வசமே இருக்கப்போகின்றது. இதனூடாக வடக்கில் சீனா நிரந்தரமாகக் காலூன்றும் முயற்சியும் மேற்கொள்ளப்படுகின்றது.

அது மாத்திரமல்லாமல் சீன நிறுவனம் தீர்மானிக்கும் விலைக்கே பண்ணையாளர்கள் கடலட்டைக் குஞ்சுகளை கொள்வனவு செய்ய வேண்டியிருக்கும். இந்த குஞ்சுகளின் மூலம் கிடைக்கப்பெறும் கடலட்டைகளை நாளை கொள்வனவு செய்யும் நிறுவனமாகவும் இதே சீனநிறுவனம்தான் திகழப்போகிறது. இதனால் குஞ்சுகளை கொள்ளை இலாபத்திற்கு விற்று, குறைந்த விலையில் கடலட்டைகளைக் கொள்வனவு செய்து சீனா இரட்டிப்பு இலாபத்தினை அடையப்போகிறது. மேலும், இந்தியாவுடன் மிக நீண்ட எல்லைத் தகராறுகளைக் கொண்டுள்ள சீனா, இலங்கையின் வடக்கு மாகாணத்தில் காலூன்றுவதினூடாக இந்தியாவின் தென்பகுதியான தமிழ்நாடு, கேரளா போன்ற பகுதிகளுக்கும் பாதுகாப்புத் தொடர்பானஅச்சத்தைஏற்படுத்துகின்றது. அதற்கு நாங்கள் உடந்தையாக இருக்கக் கூடாது என்பதை எமது அமைச்சரும் மீனவ சகோதரர்களும் புரிந்துகொள்ள வேண்டும்.

எமது பாரம்பரிய மீன்பிடியைப் பாதுகாப்பது மட்டுமல்லாமல், வடக்கு மாகாண மக்களுக்கும் ஒட்டுமொத்த இலங்கை மக்களுக்கும் இங்கிருந்து கிடைக்கக்கூடிய கடலுணவுகள் கிடைக்காமல் போவதற்கான வழிமுறையாக இந்தப் பண்ணைத் திட்டங்கள் அமைந்த விடக்கூடாது என்பதை அமைச்சருக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். அதேபோன்று கடலட்டை குஞ்சுகளுக்கான ஏகபோக விநியோகத்தை சீன நிறுவனத்திடம் கையளித்து, முழு மீனவ சமுதாயமும் அவர்களில் தங்கியிருப்பதற்கான சூழ்நிலையை உருவாக்குவதும் மிக மோசமான பின்விளைவுகளை உருவாக்கிவிடும் என்பதையும் அமைச்சருக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கடலட்டைப் பண்ணை அமைக்கும் நடவடிக்கைகள் இந்தியாவின் பாதுகாப்பு தொடர்பிலும் ஏராளமான கரிசனைகளை உருவாக்கும். ஆகவே இவை அனைத்தையும் கவனத்திலெடுத்து அமைச்சர் செயற்படுவார் என்றும் செயற்படவேண்டும் என்றும் எதிர்பார்க்கிறோம். - என்றுள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்
076 443 8622
kalaikkathiradvt@ gmail.com

# கண்ணீர் அஞ்சலி



அமரர் **வைரமுத்து பாலேந்திரன்**

**மலர்வு - 07.07.1946**
**உதிர்வு - 06.12.2022**

எமது பூபாள ராகங்கள் அமைப்பாளர்களில் ஒருவரும், எமது பழைய மாணவர் சங்க ஸ்தாபக அமைப்பாளர்களில் ஒருவரும் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினராய் செயற்பட்டவரும், எமது பழைய மாணவர் சங்கத்தின் உபதலைவரும் ஆகிய திருமதி கைலாஜினி இந்திரன் அவர்களினதும் மற்றும் பூபாள ராகங்கள் அமைப்பாளர்களில் ஒருவருமாகிய திருமதி. சுபாஜினி ராஜ்குமார் அவர்களினதும் பாசமிகு தந்தையராகிய **அமரர். வைரமுத்து பாலேந்திரன்** அவர்கள் 06.12.2022 அன்று காலமானார். அன்னாருக்கு கண்ணீர் அஞ்சலியை தெரிவிப்பதோடு, அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

**பூபாள ராகங்கள் விழாக்குழு**
**கம்பர்மலை வித்தியாலயம்**
**கொம்மந்தறை.**

காலைக்கதிர் Kalaikkathir

# எங்கள் கடலையும் நிலங்களையும் தாரைவார்ப்பது நம் மக்களுக்கு நாம் செய்யும் மிகப்பெரும் துரோகம்!

## அங்கஜன் இராமநாதன் உரை



எங்கள் கடலையும் நிலங்களையும் யாரோ சிலரின் இலாபத்துக்காகத் தாரை வார்ப்பது மக்களுக்கு நாம்செய்யும் துரோகம் ஆகும்.

இவ்வாறு நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற விவசாயம், கடற்றொழில், நீர்ப்பாசன துறைகள் தொடர்பான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையில் அங்கஜன் இராமநாதன் இவ்வாறு தெரிவித்தார். தனது உரையில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தில் இன்று விவசாயம், மீன்பிடி, நீர்ப்பாசனம் தொடர்பாக இங்கு விவாதித்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் ஒன்றை நாம் மறந்துவிட்டோம். 2023 தொடங்கியதுமே இந்த நாட்டில் சின்னவெங்காயம், உருளைக்கிழங்கு, காய்கறிகள் எல்லாவற்றுக்கும் தட்டுப்பாடு வரப்போவதை நாங்கள் மறந்துவிட்டோம்.

எங்கள் மாவட்டத்தில் இந்தாண்டு பெரும்போக பயிர்ச்செய்கை வழமை போல நடக்கவில்லை. சின்ன வெங்காயம், உருளைக்கிழங்கு, காய்கறி எதுவும் இம்முறை வழமைபோல பயிரிடப்பட வில்லை. யாழ்ப்பாணத்தின் விவசாய நிலங்கள் புற்களும் புதர்களுமாக நிரம்பிக்கிடக்கிறன. இப்போது ஒரு கிலா 400 ரூபாவுக்குக் குறைவாக எந்தவொரு மரக்கறியையும் வாங்கமுடியாது. விரைவில் கையில் காசு இருந்தாலும் கடையில் காய்கறி இல்லாத நிலைதான் வரப்போகிறது.

அரசாங்கத்தைக் கேட்டால் விவசாயத்துக்கு வேண்டிய உதவிகளைச் செய்கிறோம், உரங்கள் வந்துள்ளன, கிருமிநாசினிகள் வந்துள்ளன, களைநாசினிகள் வந்துள்ளன என்று சொல்கிறார்கள். ஆனால் விவசாயிகளோ ஏராளமான பிரச்சினைகளை அடுக்கிக் கொண்டே போகிறார்கள்.

யாழ். மாவட்ட கமக்கார அமைப்புகளின் அதிகார சபை எனக்கு வழங்கியுள்ள கோரிக்கை கடிதத்தை நான் சபையில் சமர்ப்பிக்கிறேன்.

- மண்ணெண்ணெயை தொடர்ந்து தட்டுப்பாடின்றி விநியோகிக்க வேண்டும்.

தற்போது மீனவர்களுக்கு மண்ணெண்ணெய் விநியோகம் இடம்பெற்றாலும், விவசாயிகளுக்கான விநியோகம் போதாது. இந்த வருட ஆரம்பத்தில் 87 ரூபா விற்ற மண்ணெண்ணெய்கூட இப்போது பெற்றோலின் விலைக்குக் கிட்ட வந்துவிட்டது. அதுவும் விவசாயிகளுக்கு கிடைப்பதில்லை. எனவே, அதற்கான மானிய பொறிமுறையை விரைவாக உருவாக்க வேண்டும்.

- விவசாயத்துக்கு மானிய விலையில் மண்ணெண்ணெய் வழங்க வேண்டும்.

ஏனென்றால், யாழ்ப்பாணத்தில் கிணறுகளில் இருந்து விவசாயத்துக்கு தண்ணீர் இறைக்க வேண்டிய நிலமைதான் உள்ளது. ஒரே நாளில் டீசல் அல்லது சோலர் அல்லது மின்சார பம்ப் இயந்திரங்களாக மாற்றக்கூடிய வல்லமை எங்களிடம் இல்லை. இதை நாங்கள் பல தடவைகள் எடுத்துக்கூறியும் ஏன் புரிந்து கொள்ள மறுக்கிறீர்கள்?

- மேட்டுநில மரக்கறி விவசாயிகளுக்கு நியாய விலையில் உரம் வழங்க வேண்டும்.
- கிருமிநாசினி, பங்கஸ்நாசினி, களை நாசினிகளின் விலை அதிகரிப்பை கட்டுப்படுத்த வேண்டும்

விவசாயிகளுக்கு நியாய விலையில் அவற்றை வழங்க வேண்டும்.

- மரக்கறி விதைகளின் விலை 3 மடங்காக அதிகரித்துள்ளது. இதனால் ஏக்கர் மரக்கறி செய்கைக்கு 2 லட்சம் ரூபா மேலதிகமாகத் தேவைப்படுகிறது.

எப்போதும் விவசாயத்தை வாழ்க்கையாகக் கொண்டிருந்த எங்கள் மக்கள் இப்போது விவசாயமே போதும் என்ற விரக்தி நிலைக்கு வந்திருக்கிறார்கள். இந்த சபைக்கே தெரியும், எங்கள் மாவட்டத்தின் விவசாய புரட்சியினுடைய வரலாறு. தன்னிறைவு பொருளாதாரத்தை விவசாயத்தால் கட்டியெழுப்பியவர்கள் எங்கள் மக்கள். அவர்கள் இப்போதும் விவசாயத்தைக் கட்டியெழுப்பத் தயாராக உள்ளார்கள். அவர்களுக்கு அரசாங்கம் ஆதரவாக இருக்குமா என்பதே இங்கு கேள்வி.

குறிப்பாக, வலிகாமம் கிழக்கு, வடமராட்சி தெற்கு பகுதிகளில் தற்போது மழைகால வெள்ளத்தால் பயிர் நிலங்கள் அழிந்து போகின்றன. இதற்கு தொண்டைமானாறு அணைக் கட்டை உரிய காலத்தில் திறந்து வெள்ளத்தைக் கடலுக்கு விடாதது தான் காரணமென விவசாயிகள் குற்றம் சுமத்துகிறார்கள். ஆனால், அவ்வாறு நீரை தேக்கி வைத்திருப்பது நிலத்தடி நீரைப் பாதுகாக்க என்று நீர்ப்பாசனத் துறை தெரிவிக்கிறது. ஆகவே, அந்த பிரதேசங்களில் உள்ள குளங்களை ஆழப் படுத்தி புனரமைத்தால் நிலத்தடி நீருக்குத் தேவையான நீர் குளங்களில் தேங்க, மிஞ்சிய நீர் கடலுக்கு செல்லக்கூடியதாக இருக்கும்.

'வானிலிருந்து விழும் ஒரு துளி நீரையும் விவசாயத்துக்குப் பயன்படுத்தாது கடலைச் சென்றடைய விடமாட்டேன்' என்று பராக்கிரமபாகு மன்னன் சொன்னதை இந்த சபைக்கு நினைவுபடுத்துகிறேன். இப்படியிருக்க, இடைக்காடு, அச்சுவேலி, ஆவரங்கால், வாதரவத்தை கிராம விவசாயிகளின் கோரிக்கைக்கு அமைய தொண்டைமானாறு கடலால் வயல்களுக்கும் வரும் உப்புநீரைத் தடுக்க, இடைக் காடு – வல்லை – வாதரவத்தை வெள்ளப் பாதுகாப்பு அணை அமைக்கும் திட்டத்தை, மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழு தலைவராக ஆரம்பித்து வைத்திருந்தேன். இதற்கான நிதி ஜெய்க்கா நிறுவனத்தின் Rural Infrastructure Development Project ஊடாக வழங்கி வைக்கப்பட்டது. இந்தத் திட்டத்தை முழுமைப்படுத்த மொத்தமாக 10 கோடி ரூபா தேவையாக உள்ளது.

இவற்றோடு கடந்த 2 ½ வருடங்களில் நீர்ப்பாசன செழுமைத் திட்டத்தில் எமது சிபார்சில் நடந்த குளங்களுடைய புனரமைப்பால் கடந்த ஆண்டும், இந்த ஆண்டும் மழைக்கால பயிர் அழிவுகள் பெரிதும் குறைவடைந்துள்ளன என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இப்போது மரத்தால் விழுந்தவனை மாடு ஏறி மிதித்தது போல எங்களது கடல்வளமும் காணாமல் போய்க்கொண்டிருக்கிறது. நாட்டின் மூன்றில் ஒரு பங்கு கடல்வளம் வடக்கில்தான் உள்ளது. ஆழ் கடல், குடாக்கடல், தரவைக்கடல், தீவுப் படுக்கைகள் என எல்லா வளங்களும் வடக்கில் உள்ளன. இவற்றையெல்லாம் பாதுகாத்த பாரம்பரிய மீன்பிடியைதான் எங்கள் மக்கள் செய்தனர். ஆனால் இன்று டொலரைக் கொண்டு வரும் கடல் அட்டை பண்ணைகள் வடக்கில் அதிகரித்துள்ளன. இதற்காக கரையோரங்கள் கணக்கில்லாமல் ஆக்கிரமிக்கப்படுகின்றன. இதனால் கண்டல் தாவரங்கள் அழிந்து மீன்களின் இனப்பெருக்கம் தடுக்கப்படுகிறது. இப்போதுவரை வடக்கில் 616 ஏக்கர் வரை கடல் அட்டை உற்பத்தி நடைபெறுகிறது.

ஐம்பது வருடங்களுக்கு முன்பாகவே யாழ்ப்பாணத்தில் இயற்கையான கடலட்டைகளைப் பிடித்து பதப்படுத்தி வியாபாரம் செய்த உள்ளூர் வியாபாரிகள் இருந்தார்கள். ஆனால் அப்போது கடற்சூழலுக்கோ கடற்றொழிலாளர்களுக்கோ எந்தவித பாதிப்பும் இல்லை. ஆனால் இப்போது கடலட்டை குஞ்சுகளைப் பிடித்து பண்ணை அமைத்து செயற்கையாக இனப்பெருக்கம் செய்கிறார்கள். இயற்கையாகக் கிடைக்கும் வளத்தை அளவோடு பெறாமல் அளவுக்கதிகமாக ஆசைப்பட்டு இருக்கிற வளத்தையும் அழிப்பது அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சுதான். மீனவர்கள் இதற்கு எதிராகத் தொடர்ந்து போராடுகிறார்கள்.

இலவன்குடா கிராஞ்சி பிரதேசத்தில் மீனவர்கள் தொடர்ந்து 70 நாள்களாகப் போராட்டத்தில் ஈடுபடுகின்றார்கள். அனலை தீவுக்கு அருகில் உள்ள பருத்தித்தீவில் அமைக்கப்பட்டுள்ள 50 ஏக்கர் கடலட்டைப் பண்ணையை அகற்றுமாறு யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனம் போராடுகிறது. ஆனால், இப்படி போராடுபவர்கள் மீது வழக்குதாக்கல்கள் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு தமது வாழ்வாதார உரிமைகளுக்காகப் போராடும் மீனவர்கள்மீது பொய்வழக்குகள் தொடுத்து பழிவாங்குவது மகா மட்டமான அரசியலாகும்.

முதலில் இந்த விடயத்தை நாங்கள் ஆராய வேண்டும். எங்களுடைய மக்கள் கடல் அட்டையை சாப்பிடுபவர்களல்லர். அவர்கள் சாப்பிடும் மீன்களைக் கூட பிடிக்க கூட ஏராளம் பிரச்சினைகள். இந்திய றோலர் மீனவர்களையும் தடுக்குமாறு எங்கள் மீனவர்கள் காலங்காலமாக கேட்கிறார்கள். இப்போது கடல் அட்டை வியாபாரமும் அவர்களை வஞ்சிக்கிறது.

கடலட்டை ஏற்றுமதியால் வரும் டொலருக்கு ஆசைப்பட்டு, எமது மக்கள் சாப்பிடும் மீன்களைக்கூட இறக்குமதி செய்யவேண்டிய நிலைக்கு நாம் தள்ளப்படப்போகிறோம். இப்போது சீசன் காலத்து மீன்கள் கூட சந்தையில் மலிவாக இல்லை. பாரை மீன் 1,200 ரூபா, விளை மீன் 1,000 ரூபா, முரல் மீன் 600 ரூபா, இறால் 1,500 ரூபா, நண்டு 1,600 ரூபா, கணவாய் 1,200 ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது. இப்படியே நிலைமை போனால் எங்கள் மக்களையும் கடலட்டையை சாப்பிடச் சொல்லி கட்டாயப்படுத்த வேண்டிய நிலைதான் உருவாகும்.

மீனவர்களோ, நாங்களோ யாரும் கடல் அட்டை வியாபாரத்தை வேண்டாம் என்று கூறவில்லை. வாழ்வாதார மீனவர்களைக் கவனிக்காது வெறுமனே வர்த்தக மீன்பிடியை மட்டும் வளர்க்க வேண்டாம் என்கிறோம். டொலருக்காக கடற்றொழிலுக்கு சம்பந்தமே இல்லாதவர்களோடு கைகோர்க்க வேண்டாம் என்பதே மீனவர்களது கோரிக்கை. பரம்பரை பரம் பரையாகக் கடலையும், தொழிலையும் அறிந்த எங்கள் மீனவர்களுக்கு தொழில் நுட்ப, வர்த்தக உதவிகளை வழங்க வேண்டும். இதனால் உள்ளூர் மக்களின் கடல் உணவுத் தேவையையும் பூர்த்தி செய்து, மீனவர்களுக்கு ஏற்றுமதி இலாபத்தையும் கிடைக்க வழி செய்ய முடியும். யாரோ ஒருவர் முழு இலாபத்தையும் கொண்டு செல்ல எங்கள் கடல்வளத்தை அடகு வைக்க வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறேன். மீனவர்களோடு இணைந்து செயற்பட வேண்டிய கடற்றொழில் அமைச்சும் naqda போன்ற நிறுவனங்களும் தமக்கு எதிராக நிற்பதாக மீனவர்கள் கவலைப் படுகிறார்கள்.

எனவே, எங்கள் வளங்களைப் பாதுகாத்த எங்கள் மக்களுக்கு துரோகமிழைக்காமல், எங்கள் வளங்களைத் தாரை வார்க்காமல் செயற்பட்டால் மட்டுமே, நாட்டின் பொருளாதாரத்தை நீண்ட காலத்துக்கு நிலைநிறுத்த முடியும். இல்லையென்றால் குறுகியகால வருமானம் மட்டுமே கிடைக்கும் ஒரு பிரபலமான திட்டமாகவே இவையும் அமையும் என்பதை ஜனாதிபதி அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். – எனத் தெரிவித்தார்.

# மீண்டும் ஒட்டுக்குழுக்களின் செயற்பாடுகள் மட்டக்களப்பில் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவா?

## சாணக்கியன் கேள்வி



தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியனின் மட்டக்களப்பு மத்திய வீதியில் அமைந்துள்ள மக்கள் சந்திப்பு காரியாலயத்தில் அமைக்கப்பட்டிருந்த பெயர் பலகை இனம் தெரியாத விசமிகளால் ஞாயிற்றுக்கிழமை இரவு சேதமாக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அங்கு பொருத்தப்பட்டிருந்த சோளார் மின்விளக்கும் திருடிச் செல்லப்பட்டுள்ளது. மேற்படி மக்கள் சந்திப்பு காரியாலயத்தில் கடந்த 2 வருடங்களாக மக்கள் சந்திப்புக்கள் இடம்பெற்று வருகின்றன.

இந்தநிலையில் இது தொடர்பாகக் கருத்து வெளியிடும் போதே இரா. சாணக்கியன் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

மக்கள் தற்போது ஓரளவிற்கேனும் நிம்மதியாக வாழ்ந்து வருகின்ற நிலையில், மட்டக்களப்பில் மீண்டும் ஒட்டுக்குழுக்களின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஊழல் மோசடிகளுக்கு எதிராகத் தான் தொடர்ச்சியாக குரல் கொடுத்து வரும் வகையில், தன்னை அச்சுறுத்தும் வகையிலேயே இந்தச் செயற்பாடு அமைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், மீண்டும் மட்டக்களப்பில் ஒட்டுக்குழுக்கள் தங்களது அராஜக செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளனரா எனவும் இரா.சாணக்கியன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.12.2022இல் வெளியிடப்பெற்றது.